# மாவட்டசபை மசோதாவுக்கு மந்திரி சபை அங்கீகாரம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாலபெட்டி எண். 49 மலர் 10

போன் 389 National Tamil Daily இதழ் 30 தேசிய தினசரி

[illegible] மாசி 28 ஜுல்ஹஜ் 11 திங்கட்கிழமை (11-3-68)

கொழும்பு, ஞாயிறு மாவட்ட சபை நகல் மசோதாவை தேசிய அரசாங்கத்தின் மந்திரி சபை அங்கீகரித்துவிட்டது. இனி இந்த மசோதா தேசிய அரசாங்க கட்சிக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பரிசிலனை செய்யப்பட்டபின் பார்லிமெண்டில் இம்மாதம் 25-ம் திகதி சமர்ப்பிக்கப் படுமெனத் தெரிகிறது.

மாவட்ட சபை மசோதா பார்லிமெண்டின் இக்கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னரே சகலநிலைகளிலும் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாகிவிடுமென தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் நம்புகின்றன.

ஆளும்கட்சிக் கூட்டத்தில் மசோதா அங்கீகரிக்கப்படுமென்றும் ஏனெனில் ஆளும் கட்சித்தலைவர்கள் இம்மசோதாவைப் பரிசீலனைசெய்து போதிய திருத்தங்கள் கொண்டுவந்து அதற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டதாகவும் தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

மாவட்ட சபை மசோதா [5-ம் பக்கம் பார்க்க]

# இலங்கைக்கு ரூ. 25 கோடி வெளிநாட்டு உதவிகிடைக்கும்

## இதுதவிர அமெரிக்கா உணவும் அளிக்கும்

கொழும்பு, ஞாயிறு இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென 25 கோடி ரூபாய் உதவியளிக்க இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகள் தீர்மானித்துள்ளன.

இத்தொகை தவிர இலங்கைக்கு சுமார் அறுபது லட்சம் ரூபாய்க்கு பெறுமதியான உணவுவகைகள் உதவியை அமெரிக்கா உதவியாகக் கொடுக்கவிருக்கிறது.

இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் குழுக்கூட்டம் இப்பொழுது பாரிசில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பத்துக்கோடி ரூபாய் தான் இலங்கைக்கு உதவியாகக் கிடைக்கும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருந்ததாகவும் இலங்கைத் தூதுகோஷ்டியினரின் முயற்சியால் இருபத்தைந்து கோடி ரூபாய் உதவிகிடைக்கிறதெனவும் அரசாங்கவட்டாரங்கள் கருதுகின்றன.

இருபத்தைந்து கோடி ரூபாய் உதவி கிடைப்பதால் இலங்கையின் பொருளாதாரத் திட்டங்கள் வெகுவாக செயல்படுத்தப்படுமென்றும் அடுத்த ஆண்டிலும் அதற்கு அடுத்த ஆண்டிலும் பொருளாதாரப் பிரச்னை முற்றாக நீங்கிவிடுமென்றும் கருதப்படுகிறது.

## அரிசி இறக்குமதி அடுத்தவருடம் குறையும்

கொழும்பு, ஞாயிறு அரிசி இறக்குமதி செய்வதை அரசாங்கம் அடுத்த வருடத்தில் வெகுவாகக் குறைத்துக்கொள்ளவிருக்கிறது.

சென்ற வருடம் நான்கு லட்சம் தொன் அரிசியை அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் இரண்டு லட்சம் தொன் அரிசி சீனாவிடம் வாங்கப்பட்டது. மிகுதி இரண்டு லட்சம் தொன் அரிசியில் ஒரு தொன் பர்மாவிடமும் மற்றொரு தொன் தாய்லாந்திடமும் வாங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பர்மா தனது ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தவறிவிட்டது. இதற்குப் பதிலாக உள்ளூரில் உற்பத்தியான அரிசியையே அரசாங்கம் சமாளித்தது.

உள்ளூர் உற்பத்தி அதிகரித்திருப்பதால் அடுத்த வருடத்தில் இரண்டு லட்சத்திலிருந்து மூன்று லட்சம் தொன் வரையில் தான் அரிசி இறக்குமதி செய்யப் படுமெனத் தெரிகிறது.

## கடற்படையினரிடம் ரூ.3லட்சம்பொருள்கள்சிக்கின

காங்கேசன்துறை, ஞாயிறு புன்னாலை வடக்கில் புன்னாலை-யாழ்ப்பாணம் வீதியில் கள்ளக்கடத்தல் பொருள்களெனக் கருதப்படும் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடற்படையினரிடம் சிக்கியுள்ளன.

63 மூடை ஏலக்காயும், 13 மூடை சாதிக்காயும் ஒரு லொறியும் ஊர்காவற்றுறை கடற்படைக் கமாண்டர் திரு. ஹென்றிக்கஸ் தலைமையில் நேற்றிரவு ரோந்து சுற்றிவந்த கடற்படையினரிடம் அகப்பட்டது.

இந்தியாவிற்குக் கடத்தும் நோக்கத்துடன் இச்சாமான்கள் இங்கிருந்து கொண்டு செல்லப்பட்டதாகக் கடற்படையினர் சந்தேகிக்கின்றனர். கைப்பற்றப்பட்ட சாமான்கள் காங்கேசன்துறை சுங்கதடுப்பு அதிகாரி திரு. கே. நடராசாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக லொறியும், இருவரும் கைதுசெய்யப்பட்டு, சுங்கப் பகுதியினரால் விசாரணைசெய்யப் பட்டுவருகின்றனர்.

## மீண்டும் தோல்வி

பாரிஸ், மார்ச் 10 ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேருவதற்கு பிரிட்டன் செய்து வந்த முயற்சி நேற்றும் தோல்வியடைந்தது. பிரிட்டனின் மனுவை பிரான்ஸ் நிராகரித்துவிட்டது.

## வங்கிகளுக்கு சலுகை

கொழும்பு, ஞாயிறு இலங்கையிலுள்ள வெளிநாட்டுவங்கிகளுக்கு சில சலுகைகளும் வசதிகளும் அளிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் இதனால் இந்திய வங்கி உட்பட ஒன்பது வங்கிகள் அதிக [illegible] யக்கூடுமென்றும் அறியப் படுகிறது.

## 300க்குமேற்பட்ட புகார்கள்

கொழும்பு, ஞாயிறு மீரிகம கிரிஷிகப் பகுதியினருக்கு 300க்குமேற்பட்ட புகார்கள் பொதுமக்களிடமிருந்து கிடைத்துள்ளனவாம். நிலச்சொந்தக்காரர்கள் தமது காணியில் பயிர் செய்யும் விவசாயிகளை காணியைவிட்டுச் செல்லுமாறு வற்புறுத்தியதாகவும் [illegible] டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச அரிசியுடன்

## ஒரு கொத்து உள்நாட்டு அரிசியும் வழங்க யோசனை

கொம்பனித்தெரு, ஞாயிறு அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்டு வரும் பங்கீட்டு அரிசியுடன் ஒரு கொத்து உள்நாட்டு அரிசியையும் குறைந்த விலைக்கு பொதுமக்களுக்கு வழங்குவதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. மேலதிகமாகக் கொடுக்கும் ஒரு கொத்து அரிசியை 50 சதமாக விநியோகிக்க திட்டமிடப்படுகிறது. சமயம் தற்சமயம் அதே அரிசி ஏறத்தாழ 1 ரூபா 50 சதமாக கறுப்புச் சந்தையில் விற்கப் படுவது குறிப்பிடத்தக்கது. 50 சதமாக விநியோகிப்பதால் பொதுமக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என அரசாங்கம் கருதுகிறது.

## தமிழகத்துக்கு ஜனாதிபதியின் கேடயம்

சென்னை, மார்ச். 10 தொழில் நுட்பத்துறை பயிற்சியில் தமிழகம் சிறந்த சாதனை புரிந்திருப்பதால் இரண்டாம் முறையாகவும் ஜனாதிபதியின் கேடயத்தை பெற்றுக்கொண்டது.

இக்கேடயத்தை மத்திய மந்திரி திரு. ஜெய்சுக்கலால் ஹாத்தியிடமிருந்து தமிழக தொழில்மந்திரி திரு. நெடுஞ்செழியன் இன்று பெற்றுக்கொண்டார்.

## இரு தமிழ் நூல்களுக்கு பரிசு

புதுடில்லி, மார்ச். 10 முதியோர் கல்விக்காக எழுதப்பட்ட இரு தமிழ் நூல்களுக்கு மத்திய அரசாங்கம் பரிசு வழங்கியிருக்கிறது.

திரு கல்கி கோபாலகிருஷ்ணன் எழுதிய நூலுக்கும் திரு டி. பட்சிராஜன் எழுதிய பணம்கொழிக்கும் நாடு என்ற நூலுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

## இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு 1967ம் ஆண்டின் 14ம் இலக்க இந்திய-இலங்கை ஒப்பந்த [செயற்படுத்தல்] சட்டத்தின் கீழான இலங்கை அரசின் ஒழுங்கு விதிகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டாயிற்று. எனவே கொழும்பில் நிரந்தரமாக இயங்கும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதற்கான கூட்டுக் குழு, இற்றைவரை அடைந்த முன்னேற்றத்தை ஆராய்வதற்கும், 1964ம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை முற்றாகச் செயல்படுத்துவதற்கு மேலும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதனை ஆராய்வதற்குமென மார்ச் மாதம் 4ந் திகதி கூடியது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தேதியான 1964-10-30-ம் திகதியிலிருந்து 1968-2-29-ம் திகதி வரை இவ்வொப்பந்தத்தின் கீழ் 19,207 பேர்கள் ஏற்கனவே இந்தியக் குடிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறும் இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலய அறிவிப்பைக் கூட்டுக்குழு கவனித்தது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குதிருப்பி அனுப்பப்படுவோரின் புனருத்தாரணத்திற்கென, பிரதானமாக தென்பகுதிகளில் இந்தியாவில் தற்போது எடுக்கப்படும் தீவிர நடவடிக்கை [5ம் பக்கம் பார்க்க]

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### திங்கள் 11-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-25 நிகழ்ச்சிக்குறிப்பு, 7-30 குரல் வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர சாலம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 புல்லாங்குழல் — எஸ். செல்வநாயகம், 6-45 பா வளம், 7-00 இராமஞ்சிலை, 7-30 முத்தி நெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேட்டி, 9-45 பாட்டு — சத்தியபாமா ராஜலிங்கம்.

## வரவேற்பு

திருக்கோணமலை, ஞாயிறு

இலங்கைத் திராவிடமுன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. இளஞ்செழியனுக்கும் தலைமைக்கழக அலுவலாளர்களுக்கும், திருக்கோணமலைக் கிளையினரால் பெரிய முற்ற வெளியில் அமைந்துள்ள நகர சபை மேடையில் வரவேற்பு அளிக்கப்பட்டது

திரு. இரா. முருகையா தலைமைவகித்த பொதுக்கூட்டத்தில் இலங்கை தி.மு.கழகம் அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்தப் பட்டதை விளக்கி பொதுச்செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் பேசினார். மற்றும் துணைப் பொதுச் செயலாளர்களான திருவாளர்கள். எ.உ. தேவராசன், இளம் வழுதி நீதிக்குழுச் செயலாளர் திரு. ஜே. எஸ். சுந்தரப் அமைப்புக் குழு செயலாளர் திரு. பூ. ஆ. விசாகரத்தினம் சட்டக்குழுச் செயலாளர் திரு. வி. ஈ. செல்வராசா, குறட்செல்வன் குமாரசாமி மட்டக்களப்பு கிளைச் செயலாளர்திரு. இ. க. ஆறுமுகம் திரு. கா. அ. மாணிக்கராசா ஆகியோரும் பேசினர்.

## பாலத்தின் கோலம்

அனலைதீவு, ஞாயிறு

அனலைதீவுக் கிராமசபைப் பகுதியில் உள்ள வீதிகள் ஒழுங்கைகள், பாலங்கள், மிகவும் சீர்கேடான நிலைமையில் உள்ளன. சென்ற வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட புயல், மழையினால், பாலம் ஒன்று அள்ளப்பட்டது இது இதுவரை திருத்தப்படாத நிலையிலேயே உள்ளது.

ஒழுங்கைகளைத் திருத்தவும், பெருப்பிக்கவும், செப்பனிடவும் பணம் ஒதுக்கப்பட்டு ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், பெரும்பாலான வீதிகள் திருத்தப்பட்டு இடைநடுவில் விடப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டம் அனுபவித்து வருகின்றனர். இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளருக்கு பொதுமக்களால் மகஜரொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஜூலையில் தமிழிலும் வெளியாகும்

குரும்பசிட்டி, ஞாயிறு

"தற்போது சிங்கள, ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள தொலைபேசி 'டைரக்டரி' இவ்வருடம் ஜூலை மாதம் தமிழ்மொழியிலும் வெளியிடப்படவிருக்கின்றது. இவ்வெளியீட்டு வேலைகள் இப்பொழுது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன."

உதவி தபால்தந்திபொது மராமத்து அமைச்சரும் கட்டானை எம். பி.யுமான திரு. விஜயபால மெண்டிஸ்இத் தகவலை நமது நிருபரிடம் தெரிவித்தார்.

தென்னிலங்கை மக்களின் நல்லாசியை தமது விஜயத்தின்மூலம் இப்பகுதிசகுக் கொண்டுவந்துள்ள தான் தமிழ்மக்களின் நல்லெண்ணத்தை வடபகுதியிலிருந்து தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## புதிய உறுப்பினர்

சங்கானை, ஞாயிறு

சங்கானை ஐக்கிய சனசமுக நிலைய வருடாந்தக்கூட்டம் இம்மாதம் நடைபெற்றபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டனர்.

தலைவர் திரு. பாலசுப்பிரமணியம், செயலாளர் திரு. சி. க. பொன்னம்பலம், பொருளாளர் திரு. க. நகுலநாதன், ஐந்துபேர்கொண்ட நிர்வாகசபைஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. நூல்நிலையப் பொறுப்பாளராக திரு. வ. ஸ்ரீஸ்கந்தராசா நியமிக்கப் பட்டுள்ளார்.

## கூட்டாக் காலி கால்நடைகளின் தொல்லை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை தாங்க முடியாமலிருப்பதாக மக்கள் பலத்த புகார்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனராம்.

## உத்தியோக பற்றற் மேற்பார்வையாளர்

நயினாதீவு. ஞாயிறு

நயினாதீவு அரசினர்வைத்திய சாலைக்கு உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளர்களாக நயினாதீவு இராமசபை உபதலைவர் திரு. அ. நல்லையா திரு. ந. ... ... ... சுகாதார மந்திரியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கார்:

1 இறீ 5149 போர்ட் பிறிபெக்ட், நல்ல நிலையில் தனிப்பாவிப்புக்குரிய கார் விற்பனைக்குண்டு. பங்குனி 12-ம், 13-ம் திகதிகளில் பார்வையிடலாம். 46/2, கொழும்புத் துறை வீதி, யாழ்ப்பாணம். 1950

### தேவை

வான்சாரதி:

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வியாபாரஸ்தாபனமொன்றுக்கு லொறி லைசென்ஸ் வைத்திருக்கும் வான் சாரதிதேவை. [வயது30—45] தகுதியுடையவர்கள் இதற்குமுன் வேலை செய்த அத்தாட்சிப் பத்திரங்களுடன், விளம்பர இல: 1785, மே/பா, 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 20-3-68க்கு முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1785

### NOTICE

Wanted for a NURSING HOME in JAFFNA town a Nurse, Midwife and a female attendant Also educated youths with knowledge of English for training in Dispensary work and subsequent employment if found suitable. Apply with details C/o Eelanadu. Advt. No. 1784.

1784

### வாடகைக்கு

வீடு:

குழாய்நீர், மின்சாரம் மற்றும் வசதிகளுடைய யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியிலுள்ள 14-ம் இலக்க வீட்டின் ஒரு பகுதி வாடகைக்குக் கொடுக்கப்படும். குறித்த விலாசத்தில் தொடர்பு கொள்க. 1789

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் [4 அறை] புதிய வீடு வாடகைக்கு உண்டு. V. பரமநாதர் ஆனைக்கோட்டை.

1787

### கல்வி

இலங்கையில் தமிழ் சுருக்கெழுத்தின் முன்னோடியும், உலகில் ஆங்கில சுருக்கெழுத்தைக் கற்பிப்பதில் கூடிய அனுபவமுள்ளவருமான வேலுப்பிள்ளை நுட்பமான முறையில் குறுகிய காலத்தில் கற்பிக்கிறார். தற்போது இரு சுருக்கெழுத்திற்கும் 110 மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். புதிய வகுப்புகளுக்கு விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இரு பாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வேலுப்பிள்ளை, வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை.

1781

யாழ் மாவட்ட

## குடியேற்றத் திட்டங்களுக்கு புதிய பெயர்கள்

உடுவில், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களுக்குப் பொருத்தமான புதிய பெயர்களை இடுவதற்கு என நியமிக்கப்பட்ட விசேஷ உபகுழுவின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை மேற்படி உபகுழுக் கூட்டத்துக்கு தலைமைவகித்தார்.

தற்போது நடைமுறையில் இருந்துவரும் உமையாள்புரம், குமரபுரம், உருத்திரபுரம், சிவபுரம், சேதிநகர், கணேசபுரம், திருநகர், கனகபுரம், திருவையாறு, கருமபுரம், யோகபுரம், செல்லபுரம், ஸ்கந்தபுரம் ஆகியவற்றின் பெயர்களை அங்கீகரிப்பது என்று மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு, புதிய வட்டாரங்களில் எல்லைகளை அரசாங்கப் படங்களில் விஸ்தாரமாக அமைப்பதற்குநடவடிக்கைகள் எடுப்பது என்றும், புதிய குடியேற்றத் திட்டங்களாகிய கரியாலை, நாகபடுவான், தென்னியன் குளம், விஸ்வமடுக் குளம் ஆகிய திட்டங்களுக்கு பொருத்தமான புதிய பெயர்கள் அமைப்பதற்கு காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம் ஸ்ரீகாந்தாவின் ஆலோசனைகளையும் பெற வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## வவனியா 'இந்திய விவசாயிகளுக்கு' கடன் கிடைக்கும்

வவனியா. ஞாயிறு

வவனியாவிலுள்ள இந்திய வம்சாவழி விவசாயிகளுக்கு புதிய பாதை திறக்கப்படவிருக்கிறது.

வவனியா அரசாங்க அதிபர் திரு. வி. ஸி. பெரேரா இங்குள்ள இந்தியப் பிரஜைகளின் தோட்டங்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு போதிய கடனுதவி கிடைக்க ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி தெரிவித்துள்வார்.

தமக்கு விவசாயக் கடன் கிடைத்தால் உணவு உற்பத்தி அபிவிருத்தியில் தாம் மேலும் உழைக்கலாமென இந்த விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## பரந்தன் விவசாயிகள் கவலை

பரந்தன், ஞாயிறு

நீவில் குஞ்சர் பரந்தன் பகுதியிலுள்ள நெடுங்கமங்களில் உவர்த்தன்மை படிந்துள்ளதால் மேற்படி நிலங்களில் நெல்வேளாண்மை செய்ய முடியாதிருப்பதாகத் தெரிகிறது.

## காணிமந்திரி விஜயம்

மூதூர், ஞாயிறு

காணிநீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா ஏப்ரல் முதல் வாரத்தில் கந்குடா தொகுதிக்கு விஜயம் செய்வார். முகுந்தன குமாரவெளி அணைக்கட்டுக்கான அத்திவாரக்கல்லை நாட்டுவதற்காகவே கல்குடா எம். பி. திரு. தேவநாயகத்தின் அழைப்பின் பேரில் அவர் விஜயம செய்கிறார். தேசிய அரசாங்கத்தின் ஆட்சிக்குப்பின் கல்குடாத்தொகுதியில் அமைக்கப்படும் இரண்டாவது பெரிய அணைக்கட்டு இதுவாகும்.


MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45p.m.
Chrisopher Lee
in
DRACULA
Prince of Darkness

REGAL JAFFNA
Daily at
4-40. -700. & 9-45 p.m.
Stewart Granger &
Mid Massini
In
The Secret Invasion
Color by De Luxe and Panavision

78வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போசனதினங்களில்காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

4-வது வாரம்
நியூ காலிங்கா
(இணுவில்)
தினசரி 6 30, 9-30 மணி
தினசரி 2-30 க்கு மெற்னி
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. ஜெர்மனி - சீன ராஜிய உறவுகள்

ஹம்பேர்க், மார்ச் 10

மேற்கு ஜெர்மனிக்கும் சீனுவுக்குமிடையே என்ருவது ஒருநாள் ராஜதந்திர உறவுகள் ஏற்படும் சாத்தியம் பற்றி மேற்கு ஜெர்மன் வெளியுறவு மந்திரி திரு. விலி பிராண்ட் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்.

ஜெர்மன் கிழக்கு ஆசிய சங்கத்தின் கூட்டமொன்றில் பேசுகையில், சீனுவுக்கும் அதன் மிகப்பெரிய ஐரோப்பிய வர்த்தகப் பங்காளியுமான மே. ஜெர்மனிக்குமிடையே ஏன் ராஜதந்திரத் தொடர்புகள் இல்லை என்பதற்கு திரு. பிராண்ட் முதற்தடவையாகப் பகிரங்கமாகக் காரணங்களை விளக்கிஞர்.

'எமது நிலையில், இந்த விஷத்தில், இரண்டுபெரியவல்லரசுகளுடனும் (ரஷ்யா. அமெரிக்கா) மோதுவதுடன் ஜப்பானிய தப்பபிப்பிராயங்களையும் ஏற்படுத்துவது பைத்தியக்காரத் தனமாகும்' என்று அவர் கூறிஞர்.

'ஆனலும், சீன மக்கள் குடியரசுடன் பின்னர் ஒரு காலத்தில் வழமையான தொடர்புகள் வைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நான் தவிர்த்துவிட விரும்பவில்லை' எனறு திரு. பிராண்ட் மேலும் குறிப்பிட்டார்.

சீனுவுடனன எந்தஎதிர்காலத் தொடர்புகளும், மே. ஜெர்மனியின் நட்புறவுநாடுகளுடன் அது கொண்டுள்ள தொடர்புகளைக் குழப்புவதாக அமையக்கூடாது என்றும் திரு. பிராண்ட் வலியுறுத்தஞர்.

# வியட்கொங் இளம் பெண்ணை ஆஸி. துருப்புகள் இம்சை

## இராணுவம் விசாரிக்கும்

கன்பெரா, மார்ச் 10

வியட்னமில். ஆஸ்திரேலிய துருப்புக்கள் வியட்கொங் கைதிகளை இம்சைப்படுத்தியதாக அமெரிக்க ஆசிரியர்ஒருவர், தமது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி ஆஸ்திரேலிய இராணுவம் விசாரணையொன்றுநடத்தவிருக்கிறது.

ஆஸ்திரேலியத் துருப்புகள், ஒக்டோபர், 1966ல், 18 வயதுவியட்கொங்கிய இளம் பெண்ணெருத்தியை, அவளுடைய தொண்டைக்குள் சுமார் அரைமணி நேரம் தொடர்ந்து தண்ணீரைச் செலுத்திக்கொடுமைப்படுத்தியதைக் கண்டதாக ஓர் ஆஸ்திரேலிய பத்திரிகையாளரே அமெரிக்க ஆசிரியரிடம் விவரித்ததாகக் கூறப்படுகிறது.

### பாப்பரசர் கண்டனம்

ரோம், மார்ச் 10

ரொடீஷியாவில் மூன்று ஆபிரிக்கர்கள் தூக்கிலிடப்பட்டது குறித்து பாப்பரசர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### திபேத்தில் புரட்சி

புதுடில்லி, மார்ச் 10

திபேத்தில் சீனச் செங்காவலருக்கும் மாசேதுங் எதிர்பாளர்களுக்குமிடையில் கடும் சண்டை நடந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

# சைகோனில் 14,000 அமெரிக்க துருப்புகள்

## வியட் கொங்கியர் கொன்றதாகச் செய்தி

ஹொங்கொங், மார்ச் 10

தென்வியட்னும் தலைநகரான சைகோனில் பெப்ரவரி 29-ந் திகதியுடன் முடிவுற்ற 30 தினங்களில், 14,000 அமெரிக்கர் உட்பட 30,000 துருப்புக்களைத் தாம் கொன்றுள்ளதாக, நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

வியட்கொங் செய்தி ஸ்தாபனமொன்றே இத்தகவலை வெளியிட்டதாக நவசீனச் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

மற்றும் 400க்குமதிகமான விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன அல்லது தரையிலே வைத்து அழிக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 10,000தொன் நிறையுள்ள போர்க் கப்பல் ஒன்று உட்பட 12 இராணுவக்கப்பல்கள் நீரில்மூழ்கடிக்கப்பட்டோ அல்லது சேதப் படுத்தப்பட்டோ உள்ளதாகவும் செய்தித் தாபனம் மேலும் தெரிவித்தது.

### வல்லரசுகள் முடிவுக்கு சீனு எதிர்ப்பு

ஹொங்கொங், மார்ச்10

ஜெனிவாவில், ஐ. நா. ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில், அணு ஆயுத உற்பத்தி செய்யாத நாடுகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதென ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளும் செய்துள்ள முடிவு குறித்துச் சீனு கண்டனம் தெரிவித்துள்ளது.

வார்சோவில்

### பொலிசாருடன் மாணவர் மோதல்

வார்சோ, மார்ச் 10

வார்சோவில் பொலிசாரும் மாணவர்களும் நேற்று முன் தினம் மோதிக் கொண்டனர். தமது சக மாணவர் இருவரைப் பல்கலைக்கழகத்திலிருந்து நிறுத்தி வைத்ததை எதிர்த்துப் பல்கலைக்கழக மாணவர்கள் 2 மணி நேரம் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களைப் பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

ரஷ்ய எதிர்ப்பு வசனங்களடங்கிய 19-ந் நூற்றுண்டுச் சரித்திர நாடகமொன்றின் [illegible] மாணவர்கள் அ[illegible]

# 130 மாணவருக்கு 2 ஆசிரியர்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் திருவடிநிலை தமிழ் கலவன் பாடசாலையில் நூற்றிமுப்பதுக்குமேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு கல்வி போதிக்க தலைமையாசிரியருடன் ஒரு ஆசிரியை மட்டுமே கடமையாற்றுகின்ருர்.

கடந்த முதலாம் மாதத்தில் மொத்தமாக நான்கு ஆசிரியர் கடமையாற்றி வந்தனர். இவர்களில் ஒருவர் இடமாற்றத்திலும் மற்றவர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கும் சென்றுவிளனர். தலைமையாசிரியர் பெரும் சிரமத்தின் மத்தியில் பாடசாலை வகுப்புகளை நடாத்தி வருவதாகத் தெரிகிறது. இப்பாடசாலையின் ஆசிரியர் பற்றுக்குறை, கட்டிட வசதிகள் போன்ற விஷயங்களை உடன் கவனிக்குமாறு இப்பகுதியிலுள்ள பெற்ருேர்கள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

### மரணவிசாரணை அதிகாரியில்லை

அனலைதிவு, ஞாயிறு

அனலைதிவு கிராமசபைக்குட்பட்ட பகுதிக்கு மரண விசாரணை அதிகாரி இல்லை. சென்ற வருடம் இளைப்பாறிய திரு. வயித்திலிங்கத்துக்குப் பதிலாக இதுவரை எவரும்நியமிக்கப்படவில்லை திடீர் மரணங்களுக்கு விசாரணைநடாத்த மரண விசாரணை அதிகாரியைத்தேடி வேறு இடங்களுக்கு அலைய வேண்டிய சூழ்நிலையில் அனலைதிவு மக்கள் உள்ளனர்.

சென்றகிழமை அனலைதீவில் ஏற்பட்ட ஓர் திடீர் மரணத்துக்கு நயினுதீவு மரண விசாரணை அதிகாரியை அழைத்துவரவேண்டியநிலை ஏற்பட்டதாகத் தெரிகிறது.

# குண்டசாலை விவசாய பாடசாலை இறுதிப்பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற குண்டசாலை விவசாயப்பாடசாலை கடைசிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விபரம் பின்வருமாறு:

செல்வி ஆர். அன்னம்மா, எம். அபேரத்ன, ஜே. அமரக்கோன், ஏ. அமரசிங்கா, ஏ. அந்தனி மார்க், எம். அப்புஹாமி, ஜே. கட்டிகல, செல்வி ஐ. அதுலதிமுதலி, செல்வி டி. பந்துமதி, பி. பண்டா, செல்வி எம். பந்துமதி, எல். பந்துதிலக, ஸி. பண்டா, பி. பஸ்நாயக்கா, டி. தர்மபால, எம். தஸநாயக்கா, பி. திஸநாயக்கா, சி. திஸநாயக்கா, டி. சில்வா, செல்வி ஐ. சில்வா, எஸ். கார்த்தியவாசம், செல்வி, பி. ஞானவதி, கே. ஞானசேகரம், ஏ. குணசேரிஸ், பி. டி. குணரத்ன, கே. பண்டா, ஏ. குணதிலகா, எஸ். குணதிலகா, எச். குடபண்டா, செல்வி ஆர். கௌரி, எச். குப்புவொட, என். இலங்கசிங்க, எம். ஜெயதிலக, எம். ஜெயரத்ன, ஜி. ஜயசேன, யூ. ஜயதுங்கா, பி. ஜோனி, ஏ. ஜெயசேகரா, செல்வி. எம். ஜெயசேகரா, கே. ஜெயசிங்கா, செல்வி. ஜெயவதி, எம். ஜெகநாதன், எஸ். கனகசிங்கம், செல்வி எஸ். கமலாதேவி, செல்வி எஸ் காரியவாசம், பி. காரியவாசம், ஸி. கட்டுகுருந்த, பி. குலரத்ன, ரி. குரேரா, செல்வி ஏ. குசுமாவதி, எஸ். குழந்தைவேலு, செல்வி. எஸ். லலரேல, ரி. மகாலிங்கம், டி டி. மகிந்தநாத, வி. மகாதேவன், செல்வி எஸ். மாலினி, ஜி. முத்துபண்டா, கே. நடராஜா, ஐ. பெரேரா, பி. பெரேரா செல்வி பி. ய. சி. லி. பெ ச. பெரேரா, எஸ். பொன்னம்பலம், பி. பொன்னையா, ரி. பொன்னம்பலம், ஆர். எம். பியசேன, செல்வி ரி. புவனேஸ்வரி, ஐ. ரூபசிங்கா, எஸ். இரத்தினசபாபதி, செல்வி. சாபியா, கே. சோமசிஸ்ஹா, செல்வி எம். சிலகம, செல்வி செல்வஹேவா, செல்வி சிலவதி, ஜி. செனிவரத்ன, ஏ. சிவராஜா, எம். சிவபாதம், டபிள்யூ. சிறிவர்த்தன, ஜி. சிறிசேன, எச். சுகததாசா, செல்வி, சுவினீதா, செல்வி சூரியராச்சி, செல்வி தேவரத்தினம், என். தவராஜா, செல்வி திரவியம், ஏ. திலகரத்ன, எம். திலகரத்ன, ஜி. திலகரத்ன, எம். உபசேன, செல்வி பி. விதானகே, எம். வன்னிகம, ஜி. வறக்காகொனிய, உ. விஜயானந்த, டி. விஜேசிங்கா செல்வி ஸி. விஜேசிங்கா, செல்வி விக்ரமதுங்கா. பி. வெத்தாவ, பி. விக்ரமதுங்கா, செல்வி யசவதி, எஸ். யோகலிங்கம், எஸ். யோகசுந்தரம், டி. யசரத்ன, ஏ. விஜேவர்த்தன, செல்வி ஏ. விக்ரமாராச்சி.

இரண்டாம் பிரிவில், சித்தியடைந்தோர் விபரம் பின்வருமாறு:-

செல்வி கே. தவமணி, ஆர். நடராசசுந்தரம், டி. சில்வா, எஸ். குணதிலகா, ஏ. கருணரத்ன, டபிள்யூ. கருணரத்ன, ஏ. குலதுங்க, செல்வி. டி. பிரேமலதா.

பரீட்சையைப் பூர்த்தி செய்யாதவர்கள் விபரம் பின்வருமாறு:-

பி. அதிகாரி, ஏ. யாமவர்த்ன, ஆர். சுத்திரசேன, ஜி. ரிக்கிறிபண்டா, கே. பாரொன், எம். ஜெயதிலகா, எஸ். கொப்பேகடுவ, எம். ரம்பண்டா, சி. லெப்பை, டபிள்யூ. உபயசேன. (கா. நி)

# வட வியட்னும் தாக்குதலை அமெரிக்கர் முறியடித்தனர்

சைகோன், மார்ச் 10

வியட்னமில் முக்கிய அமெரிக்கப் போர் நிலையமான டோகிஹோவின்மீது படையெடுத்துவந்த வடவியட்னமிய படைப் பிரிவொன்றை அமெரிக்கத் துருப்புகள்முறியடித்துள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் இங்கு தெரிவித்தார்.

ஏழு மணி நேரம் நடைபெற்ற கடும் சண்டையில் 400 பேரைக் கொண்ட அந்த வடவியட்னும்படைப் பிரிவை இரு கூருகப்பிளத்துவிட்டதாகத் தென்வியட்னமிய, அமெரிக்கத் துருப்புகளின் தளபதிகள் அறிவித்தனர். வடவியட்னமியர் 138 பேரைக் கொன்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### மூவரைக்கொன்ற பொலிஸ் வான் தீ வைக்கப்பட்டது

கல்கத்தா, மார்ச் 10

இங்குள்ள ஒரு ஒடுக்கமான பாலத்தில் மூன்று பாதசாரிகளைக் கொன்ற ஒரு பொலிஸ் வானை, ஆத்திரமடைந்த கூட்டத்தினர் தீ வைத்துக் கொளுத்தினர்.

வானுக்குள் அகப்பட்டுக் கொண்ட பொலிஸ்காரரைத் தப்ப வைக்கப் பொலிசார் கூட்டத்தினர் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்யவேண்டி ஏற்பட்டது.

ஐ. நா.

# பந்தோபஸ்து சபையில் கம்போடியா புகார்

## அமெரிக்க பாதுகாப்பு நிலையம் பற்றி

நியூயோர்க், மார்ச், 10

அமெரிக்க, தென் வியட்னமிய துருப்புக்கள், தனது பிராந்தியத்தின் 80 மைலுக்குள்ளாகவே, பாதுகாப்பு நிலையமொன்றை அமைத்து வருவதாகக் கம்போடியா, ஐ. நா. பந்தோபஸ்து சபையிடம் புகார் செய்துள்ளது.

கடந்தமாதம் 14-ந் திகதி அமெரிக்க, தென்வியட்னும் துருப்புகள், கம்போடியாக் கிராமமொன்றைத் தாக்கிய போது, நான்குபேர் காயமடைந்ததாகக் கம்போடியப் பிரதிநிதி திரு. ஸம்பத் சபையில் கூறினர்.

வந்த இடங்களில் ஆரவாரம் செய்து குழப்பம் விளைவித்ததாகவும், அதைத் தொடர்ந்து இரு மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் [illegible]

### இளமை நீடிக்க

உடுப்பிட்டி, திங்கள்

''ஒரு நாடு வளம்கொழிக்கும் நாடாக விளங்கவேண்டுமாயின் நாட்டு மக்களனைவரும் நோயற்றவர்களாக வாழவேண்டும். மக்கள் சுகதேகிகளாக இருந்தாலே விவசாய, பொருளாதார அபிவிருத்தியில் தீவிரமாக ஈடுபடமுடியும். உணவுப் பிரச்னை ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் மனவலிமையும் திடநம்பிக்கையும்பெறவிளையாட்டுக்கள் நன்மைபுரிகின்றன. உடற்பயிற்சியினுல் இளமை நீடித்துநிற்கும். நாம் தினமும் உடற்பயிற்சி செய்துவந்தால் எம்மை ஒருபோதும் நோய்கள் அணுகமாட்டா. இத்திட்டத்தை ஆரம்பித்த அரசாங்கத்தின் முயற்சி பாராட்டிற்குரியது''

மேற்கண்டவாறு கரவெட்டி வடக்குக் கிராம சேவையாளர் திரு. ஆ. தாமோதரம்பிள்ளை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை உடற்பயிற்சிப் போட்டிக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர். மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. ஜே.கே. செல்வத்துரையும்பேசினர். வதிரி உல்லியனொல்லை அம்மன் கோவில் வீதியில் மாணவர்களின் உடற்பயிற்சிப் போட்டிகள்நடைபெற்றன.

### தேர்தல் அதிகாரியிடம் கோரிக்கை

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவில் அண்மையில் நடைபெறவிருக்கும் கிராம சபைத் தேர்தலின் முடிவுகளில் 6-ம், 7-ம் வட்டாரங்களின் முடிவுகளை ஒரே வேளையில் அறிவிக்கும்படி நெடுந்தீவு நடுக்குறிச்சி கிராம முன்னேற்றச் சங்கம் தேர்தல் அதிகாரியைக் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பணிவுடனிருங்கள். எல்லா உயிர்களையும் மானசீகமாக வணங்குங்கள். பகட்டு, செருக்கு வெளிவேடம் ஆகியவற்றை அகற்றுங்கள்.

— சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 28ம்திகதி [11-3-68]


## சிமெந்து தட்டுப்பாடு

நாட்டுக்குத் தேவையான சிமெந்து முழுவதையும் இங்குள்ள சிமெந்து தொழிற்சாலை உற்பத்தி செய்யவில்லையெனினும் அதன் உற்பத்தி அதிகரித்து வருவதாகவும் நாட்டின் தேவையின் ஒரு பகுதியையாவது பூர்த்தி செய்துவருகிறதென்றும் கூறப்பட்டது. நமது நாட்டில் நிறுவப்பட்ட பெரியதொழிற்சாலைகளின் ஒன்றிரண்டாவது உற்பத்தியை அதிகரித்து வருவதை அறிந்தும் நாட்டின் தேவையின் ஒருபகுதியையாவது பூர்த்தி செய்து வருவதைக் கண்டும் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால்...

இப்பொழுது நாட்டில் சிமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. சிமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள யாழ்ப்பாணக்குடாநாட்டிலேயே சிமெந்து கிடைப்பது முயற்கொம்பாக இருக்கிறது. இது சொள்ளை லாபத்துக்கும் பதுக்கலுக்கும் இடமளித்திருக்கிறது. கடைகளில் ஒரு பாக்கட் சிமெந்தின் கட்டுப்பாட்டுவிலை ஒன்பதே முக்கால் ரூபாய். ஆனால் அந்த விலைக்கு இப்பொழுது சிமெந்து கிடைப்பதாக இல்லை. 'கறுப்புச் சந்தை'யில் ஒரு பாக்கட் சிமெந்து பதினைறு ரூபாயாக விற்கப்படுகிறது. இந்த அதிக விலைக்குத்தான் சிமெந்து வாங்கக்கூடியதாக இருக்கிறது. சிமெந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பல நோக்கக் கூட்டுறவுச்சங்க சமாஜங்கள் சிமெந்தை வாங்கி விநியோகித்து வருகின்றன. இதனால் தேவையானவர்களுக்கு சிமெந்து ஓரளவாவது கிடைக்கக் கூடியதாக இருந்து வருகிறது. ஆனால் இன்று 11-ம் திகதியாகியும் இந்தமாதம் கொடுக்க வேண்டிய சிமெந்து குறியளவை இன்னமும் சிமெந்துத் தொழிற்சாலை வழங்கவில்லை. சென்றமாதம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்த சிமெந்தின் குறியளவில் கால்பங்குதான் இம்மாதம் வழங்கப்படுமென்று கூறப்படுகிறது. இதற்குக் காரணம் என்னவென்பது தெரியவில்லை. வீடில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கம் முயற்சி செய்கையில் வீடமைப்பதற்குத் தேவையான மூலப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் வீடில்லாப் பிரச்னையை எப்படி நீக்க முடியும்? சிமெந்துத் தொழிற்சாலையில் உற்பத்தி குறைந்துவிட்டதா அல்லது சிமெந்து விநியோகம், விற்பனை முறைகளில் ஏதாவது தவறு ஏற்பட்டிருக்கிறதா? சிமெந்து உற்பத்தி குறையாதிருந்தால் இப்பொழுது சிமெந்துக்கு ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாட்டுக்குக் காரணம் என்ன? கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு சிமெந்து கிடைக்கக் கூடியதாயிருப்பது எப்படி?

வீடு கட்டுவோருக்கு மட்டுமல்லாது சமீபத்திய வெள்ளம் புயல் ஆகியவைகளினால் சேதமடைந்த வீடுகளைத் திருத்தி அமைப்போருக்கும் சிமெந்துத் தட்டுப்பாடும் மற்றொருபழுவைச் சுமத்துவதாக இருக்கிறது. இது ஏன்? இதற்குக் காரணம் என்ன?

# மலையகத்தில் மாத்தளை மாசிமக தேரோட்டம்

இயற்கையழகும் செயற்கையழகும் ஒருங்கேயமையப் பெற்றதும மேன்மைக்கொரு சமயமாம் சைவமும். முத்தமிழும் தழைத்தோங்க அடிப்படைக்கருவியாகத் திகழும் மனோரம்மியமான ஈழத்தின் மத்தியஸ்தானத்தின் மாத்தளை மாநகரின் கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவவிஞ்ஞாபனமும், மாபெரும் இரதோற்சவமும் நல்லூர் தேர்த்திருவிழாவைப்போலவும், கொழும்பு வேல்விழாவைப் போலவும் மிகவும் மகத்துவம் பெற்றதாகும்.

''வண்ண மழை பொழிந்துயிர்கள் கலக்கமுறுவகை காக்கும் காரணத்தால்
பன்னகம்பதி மாத்தளை முத்துமாரியெனத் தொழுதேத்தும
அன்னை தனைத் தொண்டரெல்லாம்
தரளமுதல் இரத்தினமும் சொரிந்தளிக்கும் மிகப்பெரிய தண்ணளியாள்
அருள் முத்து மாரியென அழைத்திடுவீர்
அவள் பாதம் அண்டி வாழ்வோம்',

என்று போற்றிப் புகழப்படும் எம்பிராட்டி தேவிகரும் ஆண்டுக்கொருமுறை எடுக்கும் முத்தமிழ் விழாவை அகமும் முகமும் மலர ஆனந்தத்துடன் வரவேற்பர். மலையகத்தின் அனைவரையும் கவர்ந்த இவ்மகோற்சவம் அடியார்களின் வினை தீர்க்கும் ஆனந்தத் திருவிழாவாக அமைகிறது என்பது வெள்ளிடைமலை. மாட்சிமை பெற்று-மகத்துவம் சிறப்பு அற்புதங்கள் கடந்து சக்தி நிறைந்தொழுகும் கருணையே உருவான, அம்பிகையின் அருள் பெற்று இன்பத்துடன் வாழ எம்மவர்களால்-மாத்தளை வாழ் மெய்யன்பர்களாலும் குறிப்பாகதேவஸ்தான பரிபாலன சபையினராலும் எடுக்கப்படும் இப்புனித நாட்களிலே புனித ஆலயத்தொண்டு புரிந்து, கொடியேறிமகோற்சவம் முடிவடையும் நாள் வரை மனதை ஒன்றும் படுத்தி இப்பகுதி மக்கள்-ஆசாரசீலராக வீடுகளையும் வீதிகளையும் சுத்தம் செய்து- மனதைப் புனிதப்படுத்தி மது அருந்துதல் தடுத்து, புலால் தவிர்த்து, திருத்தொண்டு புரிந்து எங்கள் முத்து மாரியை தரிசித்து அன்னை அம்பிகையின் அருள்பெறும் சிறப்பே மகத்துவமானதாகும்.

### ஆலயவரலாறு

புவி மகட்குப் பீடமும், பூமகட்குக் கிரீடமும் நாமகட்குத்திலகமும் போல் குறிஞ்சியிலே பன்னகம என்னும் மாத்தளை மாநகரின் கண். எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் சரித்திரப்பிரசித்திப் பெற்றதாகும். பல நூற்றாண்டுகளாக பழமை வாய்ந்த இத் தேவஸ்தானம் பற்றிய ஆதாரங்கள் தற்போது கிடைத்திலவாயினும்1852ம் ஆண்டு வைகாசி மாதம் 21-ம் திகதி இட்ட உறுதிப் பத்திரமொன்று இத்தேவஸ்தானத்தில் இன்றும் சான்று பகருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு பல இலட்சக் கணக்கான ரூபா செலவில் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகித்தொடர்ந்து இன்னும் நடைபெற்று வருகின்றன. இவ்வருடம் பல ஆயிரம் ரூபா செலவில் ஆலய கொடிஸ்தம்பம் அமைக்கப்பட்டுள்ளது. இன்று மலையகத்தில் புகழ்விளங்கும் இவ்வாலயத்தின் முன்னேற்றத்திற்கு மாத்தளை வாழ் வணிகர்களுக்கும், பொது மக்களுக்கும், தேவஸ்தான பரிபாலன சபையினருக்கும் மலையகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

### மகோற்சவம்

இப்பொழுது நடைபெறும் மாசி மக மகோற்சவம் [25-2-68] ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி துவஜாரோகணம் [கொடியேற்றம்] செய்து மாசி முப்பதாம் நாளாகிய [13-3-68] புதன்கிழமை இரவு மக நட்சத்திரத்தில் பஞ்சஇரதோற்சவமும் நிகழும். இவ்வுற்சவ தினங்களில் தினமும் 7மணி முதல் 9 மணிவரை தேவஸ்தான வசந்தமண்டபத்தில் அருள்மொழியரசு, திருமுருக கிருபானந்தவாரியாரது இளையவர் பாரதப்புகழ் செஞ்சொற் கொண்டல் திருப்புகழ் மணி அவர்களின் சிறந்த பக்கவாத்திய சகிதம் 'மகாபாரதம்' என்னும் விடையம்பற்றி கதா பிரசங்கமும் நடைபெறுகிறது. [12-3-68] செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீக்குளிப்பும், 12 மணிக்கு மேல் மகேஸ்வர பூஜையும், அன்றிரவு, திருசூரத் திருவேட்டைத் திருவிழாவும். 18-ம் நாளாகிய [13-3-68] புதன்கிழமை இரவு ஐந்து இரதங்களின் கண்கொள்ளாக் காட்சியான அலங்காரப்பவனியும் நடைபெறும். 19-ம் நாளாகிய [14-3-68] மாலை தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும் அதன் மறுதினமாகிய வெள்ளிக்கிழமை பகல் சண்டேஸ்வரி உற்சவமும், இரவு ஸ்ரீ வைரவர் பூஜையும் நடைபெறும் அத்துடன்இவ்வாண்டுமுதல் மாசிமக மகோற்சவம் பகல்- இரவு திருவிழாவாக விசேஷ பூஜைகளும், ஆராதனைகளும் நடைபெறும்.

(13-3-68] புதன் கிழமை மாலை கணேசப் பெருமான் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகளுடன் அம்பாள் ஸ்ரீமுத்து மாரி, தேவி- சண்டேஸ்வரி ஆகியமூர்த்திகள் சர்வலங்கார பூஜிதையாய் மின்சார தீபலங்கார அதிவிசித்திர அற்புத,விநோதபஞ்ச இரதங்களில் ஆரோகணித்தும் பக்தர்கள் புடைசூழ மங்களவாத்தியங்கள் முழங்க பக்தர்கள் பக்திப்பரவசத்தால் மூழ்க அடியார்களுக்கு காட்சியளிக்க ஊர்வலம் வருவார். இத்தகைய காட்சியைக் கண்டுகளிக்க ஈழத்தில் எல்லாப் பகுதிகளில்இருந்து வரும் மக்களின் வசதிக்காக விசேட சேவையும் பஞ்ச இரதோற்சவநேர்முகவர்ணனை (13-368] ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அஞ்சல் செய்யும் இத்தகைய எழில் மிக்க காட்சியையும். அம்பிகைக்கு பச்சை நிறமும் பவளச்செவ்வாயும் என்றதத்துவப்படி பச்சைநிறமும் சாத்தி பக்தர்களுக்குகாட்சியளித்து கோவிலுக்கு தேவி எழுந்தருளும் காட்சியையும் எல்லோரும் வாழ்க்கையில் ஒருமுறையாவது பார்க்க வேண்டிய தொன்றாகும்.

—அம்பன்பிட்டிய பிரேமநாதன்

## இன்றைய பலன்

[11-3-68]

திங்கட்கிழமை

[மாசி மீ 28உ]

திதி- துவாதசி பின் இரவு 4-25

நட்சத்திரம்- பூசம் இரவு 6-20 மேல் ஆயிலியம்.

ராகுகாலம்- 7-53—9-23.

சுபநேரம் 12-23 — 1-53.

இன்று பிறந்தவர்களுக்கு- ஏமாற்றம் தாக்கும் எதையும் தாங்கும் இதயம் வேண்டும். தொழில் துறையும் பின் தங்கிய நிலையில்தான் இருக்கும். கடமை பார்க்கும் இடத்திலும் பொறுமைக்கு இடமுண்டு. தனிவழி நடமாட்டம் தவிர்க்கப்படுதல் நன்று. தூரதேசத்துச் செய்தி கிடைக்கும் விளையாட்டு வீரர்களுக்கு பெருத்த ஏமாற்றம் விளையலாம். எனினும் உடல் நலத்தைப் பொறுத்த வரையில் சிறப்பான ஆண்டு.

மேஷம்- வேலையில் முதலிடம் வெற்றிபாதை

ரிஷபம்- எதிரிகள் பணிவர், ஏற்றமுமுண்டு

மிதுனம்- கோபக்குணம் கோடடைவிடல்

கடகம்- இன்னலின் பின்னல், இதய பாரம்

சிம்மம்- கலை ஆர்வம், கற்பனை மிகுதி

கன்னி- அவப்பெயர் கேட்டல், அடக்கமே நன்று

துலாம்- வாகன நலன் வாழ்க்கையில் வசந்தம்

விருச்சிகம்- உள்ளப்படுதாவில் உவகைக்கூத்து

தனுசு- ஆயுத பயம், அவசரம்வேண்டும்

மகரம்- தனிமை பறக்கும், இனிமை பிறக்கும்

கும்பம்- அன்புவழியால் அவதி. அவசரக்கோலம்

மீனம்- பிதாவழிப் பெருமை, இராச நடை

— சோதிடக்கலாநிதி —
திருமதி வேலுப்பிள்ளை

## சமாதான சபையின் சேவை

கொழும்பு, ஞாயிறு நீதி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட சமாதான சபை சென்ற ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட 18,486 வழக்குகளில் 6772 வழக்குகளைச் சமாதானமாகத் தீர்த்துவைத்துள்ளது. மிகுதி 11,714 வழக்குகளில் சில கோர்ட்டிற்கு பாரப்படுத்தப்பட்டன. அல்லது சில வாபஸ் பெறப்பட்டன

## நாட்டிலும் நகரிலும்

இலங்கையில் ஆதிவாசிகளாகிய வேடர்கள் காட்டுமிராண்டித்தனமான, அநாகரிகமான, பண்பாடில்லாத வாழ்க்கை நடாத்துகிறார்கள் என்று நாம நினைக்கிறோமல்லவா?

ஆனால், எமது நாகரிகத்தைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? அவர்களுடைய தீர்ப்பு அப்படி ஏதாவது ஆஹா என்று நாங்கள் ஆர்ப்பரிக்கவேண்டிய தொன்றல்ல.

தம்பனைக் காட்டில் வாழும் சில வேடர்களை அணுகி, 'வேடர்களே, நீங்கள் காட்டுமிராண்டி வாழ்க்கை நடாத்துகிறீர்கள். உங்களை நாகரிகப் பிராணிகளாக்கி உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாம் வந்திருக்கிறோம்' என்று பெருமையுடன் கூறினார் ஒரு சமூக சேவைப்பகுதி அதிகாரி.

'ஐயா, எங்களைப் பற்றிக் கவலைப்படாதீர். நாங்கள் எங்கள் ஜோலியைப் பார்த்துக்கொள்ளுவோம். மண்ணுக்கும், பெண்ணுக்கும் பொன்னுக்கும் ஒருவரையொருவர் கொல்லும் உங்கள் பட்டின நாகரிகம் எங்களுக்குத் தேவையில்லை' என்று வேட்டுவத் தலைவன் பதிலளித்தான்.

'ஊரோடொத்து வாழ்' என்பது பழமொழி. நீங்களும் உலகத்தோடு ஒத்து வாழப்படாதா?

'எங்களுக்குப் பரந்து விரிந்த காடு இருக்கிறது, தேனும், தினை மாவும் கிடைக்கிறது. ஏராளமான பறவைகளும், மிருகங்களும் நிறைந்துள்ளன. இதெல்லாவற்றையும் விட்டுவிட்டு நாங்கள் ஏன் உலகத்தோடு ஒத்துவாழவேண்டும்?'

'உங்களுக்கென்று சொந்த வீடுகள் அமைத்துக்கொள்ளப்படாதா?'

'எங்களுக்கு வீடு எதற்கு? மீன்கள் ஏதேஷ்டமாக ஆற்றில் ஓடித்திரிகின்றன. மிருகங்கள் காடு முழுவதும் சுற்றித்திரிகின்றன. அது போல எங்களுக்கு வீடு தேவையில்லை.'

'உங்களுக்குச் சொந்தமாக நிலங்கள் வைத்திருக்கவும் விருப்பம் கிடையாதா?'

'யார் சொன்னது எங்களுக்கு நிலம் இல்லையென்று? இந்தக் காடு முழுவதும், எங்களுடையது தான். ஒரு தனிப்பட்டவருக்கல்ல, எங்கள் சமுதாயம் முழுவதுக்குமே இவை யெல்லாம் சொந்தம். பட்டினத்தில் வசிக்கும் நீங்கள் தான் எங்கள் சத்துராதிகள். நீங்கள் காடுகளை வெட்டி நதிகளுக்கு அணைபோடுவதால் எங்கள் சீவியம் கெட்டுப்போகிறது.'

இதற்கு மேல் அங்கே பேசுவார்த்தை நடக்கவில்லை. எப்படி நடக்கமுடியும்?

ஃ ஃ

எழுத்தறிவும், எண்ணறிவும இல்லாத அந்த வேட்டுவத் தலைவன் இப்பேர்ப்பட்டதோர் பெரிய சித்தாந்தத்தை வெளியிட்டது ஆச்சரியமாயிருக்கிறதா அல்லவா?

கடவுள் ஒருவன் இப்பூமியைப் படைத்து அதில் மரங்களையும், மிருகங்களையும், பறவைகளையும், ஆறுகளையும், குளங்களையும், படைத்து தானியங்களையும். பழங்களையும், மலர்களையும் படைத்து இன்னும் எத்தனையோ விதமான தினபங்களையும் படைத்திருக்கிறார். இவை ஒரு மனிதனுக்கோ அல்லது ஒரு தனிப்பட்ட குலத்துக்கோ, இனத்துக்கோ, சாதிக்கோ, தேசத்துக்கோ சொந்தமா?

[5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயப் பிரவேசம் சுமுகமாக நடைபெறும்

## அரசாங்க அதிபர் கூட்டிய மாநாட்டில் நம்பிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

ஆலயப்பிரவேச இயக்கத்தைச் சுமுகமான முறையில் நடாத்த கிராமங்கள் தோறும் ஆலய முகாமையாளர்களையும், திருவிழா உபயகாரர்களையும் அர்ச்சகர்களையும், பொதுமக்களையும் அழைத்து பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதென நேற்று அரசாங்கச் செயலகத்தில் நடைபெற்ற ஆலயப் பிரவேசம் பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்றில் முடிவுசெய்யப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் சுமார் 3 மணிநேரம் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஆலய அர்ச்சகர்கள், தர்மகர்த்தா சபைத்தலைவர்கள் உட்பட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, காரியாதிகாரிகள் சைவபரிபாலனசபைதலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை, அகில இலங்கை இந்துமாமன்றப் பிரதிநிதிகள் காரியாதிகாரிகள், தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு.மாணிக்கம் ஆகியோர் உட்பட இன்னும் பலர் சமுகமளித்திருந்தனர்.

சகல இடங்களிலும் பிரசாரக் கூட்டங்களை நடத்தி தர்மகர்த்தாக்களினதும் அர்ச்சகர்களினதும் மக்களினதும் திருவிழா உபயகாரரினதும் மனதையும் மாற்றமடையச்செய்வதே ஆலயப் பிரவேசத்தை நடைமுறைக்குக்கொண்டுவர சுலபமான முறையென்றும், சுமுகமாகத் தீர்க்கக்கூடியதென்றும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்ஆதீனகர்த்தா திரு. துரைச்சாமிக்குருக்கள் இங்கு அபிப்பிராயம் தெரிவித்தார்.

இதனை ஆமோதித்துஇங்கு சமுகம் கொடுத்திருந்த பிரமுகர்கள் பலரும் பேசினார்கள். இந்து மாமன்ற யாழ். பிரதேச செயலாளரும் வைத்தீஸ்வரா கல்லூரி அதிபருமான திரு. அம்பிகைபாகன் பேசுகையில், இது ஒரு சமயப் பிரச்னை மாத்திரமன்றி இது ஒரு சமூகப் பிரச்னையும்கூட வென்றும், சிறுபான்மைத் தமிழர்களை நாம் கோவில்களுக்குள் அனுமதிக்காத இவ்வேளையிலும் அவர்கள் சைவ சமயத்தைப் பின்பற்றுவது ஆச்சரியமானதுமாத்திரமன்றி வரவேற்கத்தக்கதும் கூடவென்றார். இனியும் தாமதிக்காதுஒற்றுமையான முறையில் ஆலயப்பிரவேசத்தை நாம் நிறைவேற்றுவிட்டால் மிகப் பெரும அபாயம் எம்மைவந்துசேரக் கூடுமென்றும் அவர் தெரிவித்தார்.

சுன்னாகம் ஐயனார்கோவில் சபைத் தலைவர் திரு. நாகலிங்கம் பேசுகையில், அரசாங்க அதிபர் மாதமொருதடவை சகல இடங்களிலும் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தி ஆலயப்பிரவேசத்தை நடத்தினால் இது சுலபமாக முடியுமென்றும் இதற்குத் தாமும் தயாரக இருப்பதாகவும கூறினார்.

செல்வச்சந்நிதி கோவில் அர்ச்சகரான திரு. சிவானந்த ஐயர் பேசுகையில், சில அரசியல்வாதிகள் சமயப் பிரச்னையை இன்று அரசியல் பிரச்னையாக்கி வாக்குச் சேகரிக்கிறார்களென்றும், தாம் தமக்கு சுப்ரீம் கோர்ட்டில் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவிக்கவுன்ஸிலில் அப்பீல்எடுக்க இருப்பதாகவும் அதுவரை பொறுத்திருக்கும்படியும் கூறினார்.

வழக்கறிஞர் முத்துச்சாமிப்பிள்ளை, உதவி அரசாங்க அதிபர் திரு.ரி. முருகேசம்பிள்ளை, காரியாதிகாரிகள் வி. கந்தப்பிள்ளை, கே. தம்பிமுத்து, எஸ். ஜெகநாதன், திரு. இ. அம்பிகைபாகன், இந்துமாமன்றச் செயலாளரானதிரு.சின்னத்தம்பி, முதவியார் செ. சின்னத்தம்பி, மட்டக்களப்பு, யாழ்ப்பாண சங்கத்தலைவர் திரு. அரசரத்தினம். மாதகலைச்சேர்ந்த ஆ. விக்னராசா, ஆசிரியர் உட்பட இன்னும் பலர் துரைச்சாமிக்குருக்களின் கருத்தை ஆதரித்துப் பேசியதோடு ஆலயப் பிரவேசம் கூடிய கெதியில் நடைபெற பிரசாரக் கூட்டங்கள் அவசியமென்றும் தெரிவித்தார்கள்.

உதவி அரசாங்க அதிபர் பேசுகையில், ஆலயப்பிரவேசம் நடைபெறுகையில எல்லாக் கோவில் முன்மண்டபங்களிலும் 'ஸ்நானம் பண்ணி தோய்த்த வஸ்திரம் அணிந்தவர்கள் மட்டும் கோவில்களுக்குள் செல்லலாம்'' என்றுவிளம்பரப்பலகையை அமைக்க வேண்டும். வேண்டுமென்றால் இதனை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தாம் உதவி யளிக்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அராலி அம்மன் கோவிலைச் சேர்ந்த தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு.சுப்பிரமணியம் புலால் உண்பவர்களையும் கொலைத்தொழில் செய்பவர்களையும் மதுபானம் அருந்துபவர்களையும் கோவில்களுக்குள் செல்லவிடாது தடுக்க அரசாங்கம் சட்டம்கொண்டு வருவது வரவேற்கத்தக்கது என்றார்.

அரசாங்க அதிபர் திரு. வேணன்அபயசேகரா பேசுகையில் ஆலயப் பிரவேசத்தை சுமுகமான முறையில் நடாத்த சகலரும் சம்மதித்துள்ளதை இக்கூட்டம் நன்கு புலப்படுத்தியுள்ளதென்று குறிப்பிட்டதோடு தொகுதிகள் கிராமங்கள் தோறும் பிரசாரக் கூட்டங்கள் விரைவில் ஆரம்பிக்க நடவக்கைகள் மேற்கொள்ளப்படு மென்றும், இதற்கு காரியதிகாரிகளும் பொலிசாரும் அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க ஒழுங்குகள்செய்வார்கள் என்றும் தெரிவித்தார். அடுத்த தடவை இக் கூட்டம்நடைபெறும்போது சகல ஆலயங்களிலும் ஆலயப்பிரவேசம் நடைபெற்று விடுமென நிச்சயமாக நம்பலா மென்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு வேண்டுவோருக்கும் பொலிசார் பூரண பாதுகாப்பபை எந்நேரமும் வழங்குவசர்கள் எனபொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அர்ச்சகர்கள் தர்மகர்த்தா சபைஉறுப்பினர்கள் காரியாதிகாரிகள்இந்து மாமன்றத் தலைவர்கள் ஆகியோருக்கு அரசாங்க அதிபர் நன்றிதெரிவித்துப்பேசினார். (கா.நி)

## நாட்டிலும் நகரிலும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மனிதனுகப்பட்டவன் எவனும் இவற்றை அனுபவிக்க வேண்டுமென்பதே அப்பெருமானின் நோக்கம். ஆனால் இங்கே என்ன நடக்கிறது?

இந்தியர் இலங்கைக்கு வரப்படாது, இலங்கையர் இந்தியாவுக்குப் போகப் படாது. ஆபிரிக்கர் அவுஸ்திரேலியாவுக்குப் போகப்படாது, அராபியன் அமெரிக்காவுக்குப் போகப் படாது. எங்கும் தடை, எல்லாவற்றிற்கும் தடை.

வேட்டுவத் தலைவன் கூறியதுபோல ஆண்டவன் படைத்த நிலம் புலம், காடு மேடு, ஆறு குளம் எல்லாமே மனித குலத்துக்கு ஒன்றுக்ச் சொந்தமானவை என்று ஏற்பட்டுவிட்டால் வியட்நாம் சண்டை ஏன் நடக்கப் போகிறது? அல்லது ரொடேஷியாவில் ஆபிரிக்கர் ஏன் கழுவேற்றப்படுகிறார்கள்? அல்லது ஒரு நாட்டில் மனிதர் பட்டினியால் சாக, இன்னொரு நாட்டில் ஏன் பசும்பாலைச் சாக்கடையில் கொட்டுகிறீர்கள்? அல்லது.....?

– வழிப்போக்கன்

## மாவட்டசபை......

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கொண்டுவரப்பட்டு நிறைவேறியதும் வடக்குக்கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்திக்கென ஒரு சபையை அமைக்கக் கட்சி நிறுவவிருக்குறதாம்.

யாழ். தொழில்நுட்ப நிலைய

## தொழிற்பகுதி பர்ட்சை முடிவுகள்

உடுவில், ஞாயிறு

யாழ். கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தின் தொழில் வகுப்பு மாணவர்களின்கழக ஆண்டு 1966 - 67-க்குரிய இறுதிப் பரீட்சை முடிவுகள் பின்வருமாறு:-

மின்கம்பி இணைத்தல்பகல் போதனையினம் [தமிழ்] எம். அலோசியஸ்  எஸ். எஸ். ஆனந்தலிங்கம், பி. இராசலிங்கம், கே. குமரேசர், கே. சண்முகநாதன், கே. சின்னத்துரை. எம். தங்கவேல், ஏ. நடராசசுந்தரம். எம். நவமானிக்கம், எஸ், தருமராசா! வி. செல்வராசா, பி. சண்முகநாதன், வி. பதஞ்சலி, ஏ. பேரம்பலம், என். வைத்தியானந்தன், வி, ஜெயரட்சகதாஸ், கே. சிவரத்தினம்.

மின்கம்பி இணைத்தல் மாலைப்போதனை யினம்[ஆங்கிலம்] எம் ஆசீர்வாதம், என் சிவராசசிங்கம்.

மின்கம்பி இணைத்தல் மாலைப்போதனையினம் தமிழ் சி பத்மநாதன் என் பரமேஸ்வரன்.

[அளத்தலும் மட்டம் பார்த்தலும் பகல்போதனையினம்] கே அருளானந்தன். ஏசுந்தரராஜன், எம்ஜே ஆர் ஞானப்பிரகாசம். கே தங்கராசா, கே தேவராசன், கே நவரத்தினம். ரி பாலச்சந்திரன், வி சிறீகரன்.

மாலைப் போதனையினம்: ஏ என் இராஜகோபால், கே திவாகரத்தினம்,

கட்டட அமைப்பு பகுதி நேர போதனையினம்: எஸ் சண்முகநாதன், எம் சாம்பசிவம். கே பாலகுமாரன், கே வாமதேவன்.

கட்டட அமைப்பு மாலை போதனையினம்: எம் ... ஆர் ... எஸ் ஜெகதிதசன், வி சந்திரபாலன், பி பரராசசிங்கம். எஸ் மணிவாசகம், எம் வேலாயுதபிள்ளை.

பொறிமுறை இயந்திரவியல் (மாலைப்போதனையினம்) எஸ் என் பூரணம் பிள்ளை.

மின்சாரப் பொறியியல் போதனையினம் (மாலை) கே கயிலாயபிள்ளை.

உலோக வேலை [பகல் போதனையினம்] ஏ சண்முகசுந்தரம், எஸ் மகாலிங்கசிவம்,

மோட்டார் பொறியியல் [பகல்போதனையினம்] பொன்னையா அம்பிகைநாதன், வி இரத்தினபராசசிங்கம், பி இராசகுலேந்திரன். வி கிருஷ்ணபிள்ளை, என் சண்முகசுந்தரம், எஸ் சிவலிங்கம். எஸ் செல்லத்துரை, கே நாகராசா. எம் எம் மாக்லூப், ஐ சிறீஇராதாகிருஷ்ண பிரசாத்.

மரவேலை பகல் போதனையினம், ஆர் இராஜகுலேந்திரன், கே சிவபாலன்.

## போட்டியின்றி தெரிவு



யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவுக் கிராமசபைக்கு 5-ம் வட்டார உறுப்பினராக திரு. கே. வி. தம்பித்துரை போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் புங்குடுதீவுக் கிராம சபையின் முன்னாள் தலைவருமாவர்.

## பௌர்ணமி கலைவிழா

உடுவில், ஞாயிறு

பௌர்ணமி கலைவிழா நிகழ்ச்சிகள் உடுவில் கிராம சபை திறந்தவெளியரங்கில் இம்மாதம் 13-ம் திகதி மாலை நடைபெறவிருக்கின்றன.

## இலங்கை.........

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

பற்றி இந்தியப் பிரதிநிதி கூட்டுக்குழுவிற்கு அறிவித்தார். புனருத்தாரணம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் (சஞ்சிகை) பற்றிய விபரங்களும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவோர் இப்புனருத்தாரணத்தால் அடையக்கூடிய பலன்களை பெறுவதற்கு அவர்கள் என்ன செய்தல் வேண்டும் என்பதையும் இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் உடனுக்குடன் அறிவிப்பார்.

பிரதானமாக தோட்டப் பகுதிகளில் வசிப்பவர்களின் சொத்துக்களை மாற்றுவதற்கான வழிவகைகளை இலகுவாக்குவதற்கும், துரிதப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றி இலங்கைப் பிரதிநிதி கூட்டுக்குழுவுக்கு அறிவித்துள்ளார். இதேபோல் சேமலாபநிதி சேமிப்புகளை திரும்பப் பெறுவதற்கும் உடனே கொடுப்பதற்கும் உள்ள வழிவகைகளை இலகுவாக்குவதற்கும் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இலகுவாக்கிய இவ்வழிவகைகட்பற்றியவிபரம் விரைவில் பிரசுரிக்கப் படும்.

## செய்தி சுருக்கம்

### அடுத்த வருடத்தில்

கிழக்கு மாகாணத்துக்கு கடுகதி ரயில் சேவை அடுத்த வருடத்திலிருந்து நடைபெறவிருக்கிறது. புகையிரதப்பகுதி இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஃ ஃ

### உயர்விலை உயரஏறினர்

ரக்குவானை ஆஸ்பத்திரியில் வேலைபார்த்துவரும் தொழிலாளியொருவர் தமக்கு மூன்று வருடகாலமாக சம்பள உயர்வு தரப்படவில்லையென்ற காரணத்தால் ஆஸ்பத்திரிக் கூரைமேல் ஏறினார். அதிகாரிகள் தலையீட்டைத் தொடர்ந்து அவர் பின்னர் கீழ் இறங்கினார்.

ஃ ஃ

### தாயும் குழந்தையும் மரணம்

பிரசவ வேதனையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த கர்ப்பிணியொருவர் உரிய நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் தாயும் குழந்தையும் மரணமானார்கள்.

இவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல உடனே கார் கிடைக்காததாலேயே இவ்விதம் இரு உயிர்கள் பரிதாபமாக மாண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

ஃ ஃ

### பொலிஸார் தேடுகின்றனர்

கல்முனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 12 வயதுச் சிறுவனொருவரின் மரணம் சம்பந்தமாக கடை முதலாளி ஒருவரை கல்முனை பொலிஸார் தேடிவருகின்றனர்.

ஃ ஃ

### பற்றாக்குறை

கடற்தொழில் செய்பவர்களுக்கு கடற்தொழில்கூட்டுத்தபனம் வழங்கி வரும் வலைகள் போதாது என வருத்தித்துறை எம்.பி. திரு க. துரைரத்தினம் கடற்தொழில் கூட்டுத்தாபனத் தலைவருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளார். வடபகுதியிலுள்ள இந்த தொழிலாளர்களில் புதிய மரங்கள் உள்ளவர்களுக்கு ரூபா 4000பெறுமதியானதும் பழய மரங்கள் உடையவர்களுக்கு 2500 பெறுமதியானதுமான வலைகள் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டத்தில் பால் மா விநியோகம்

## பொதுவாக நிலவும் அதிருப்தி

— நமது விசேஷ நிருபர் —

யாழ்ப்பாணம், திங்கள் பால் உணவு விநியோகத்தில் நிலவும் போதாக்குறையினால் யாழ்ப்பாண மாவட்ட வாடிக்கையாளரிடையே பெருமளவில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. எத்தனையோ தடவைகள் இதுபற்றி முறையிட்டும், சமமான விநியோகத்துக்கு அரசாங்கம் எதுவும் செய்யவில்லை.

கடந்த மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம் கூட்டுறவு யூனியன், யாழ்ப்பாண அரசாங்க அதிபரைப்பேட்டி கண்டு பால் மா விநியோகத்திலுள்ள குறைபாடுகளை தெரிவித்தது. யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள், ஒவ்வொரு குழந்தையும் மாதம் 2 ருத்தல் நெஸ்பிரே பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருவதாக அரசாங்க அதிபர் யூனியனிடம் தெரிவித்தார். ஆனால் இதுவரைகாலமும் இந்த இலக்கு நிறைவேற்றப்படவில்லை.

யாழ்ப்பாணம் யூனியன் 10,327 குழந்தைக் கூப்பன்களுக்குப் பால்மா விநியோகம் செய்யவேண்டிய நிலையிருக்கையில், அரசாங்கத்தின் மூலம் ஜனவரி மாதத்துக்கு ஆக 6266 ஒருருத்தல் டின்களும், பெப்ரவரி மாதத்துக்கு 7106 டின்களும் மட்டுமே கிடைத்தன. ஒரு குழந்தைக்கு மாதமொன்றுக்கு ஒரு ருத்தல் கொடுப்பதற்குக்கூட இத்தொகை போதாது என்பது தெளிவு. இச்சந்தர்ப்பத்தில் நோயாளிகள் எனக்கூறிக்கொண்ட வயதுவந்தவர்களுக்கு 2 1/2 ருத்தலுக்கும் அதிகமாகவும் பெர்மிட்கள் வழங்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கிடைப்பதற்கரிய மற்றொரு பொருள் டின் பாலாகும். கூட்டுறவுச் சங்கங்களிலோ கடைகளிலோ அதைப்பெற முடியாதிருக்கிறது. கறுப்புச் சந்தையில், டின் ஒன்று ரூ. 1-25 அல்லது அதற்கு அதிகமாகவும் விற்கப்படுகிறது. இந்த டின்பால் விஷயத்திலும்கூட யாழ்ப்பாணம் யூனியன் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு டின் கொடுப்பதற்கான போதியளவு தொகையை அளிக்கும்படி அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

கூப்பன் புத்தகங்களின் அடிப்படையில், யாழ்ப்பாணம் யூனியனுக்கு சுமார் 25,000 குடும்பங்கள் இருக்கின்றன. கேட்கப்பட்ட இந்த 25,000 டின் [ஏறத்தாழ 500 பெட்டிகள்] னுக்கு பதிலாக இலங்கை போஷாக்கு உணவுக் கம்பனி ஆக 1104 டின் (அல்லது 23 பெட்டிகள்) ஒதுக்கியுள்ளது.

பால் உணவு விநியோகத்தில் வாடிக்கையாளரிடம் நிலவும் பலத்த அதிருப்தி பற்றியும், பால் தேவைப்படுவோருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தையிட்டும் யாழ்ப்பாணம் யூனியனுக்குச் சார்பான கூட்டுறவுச் சங்கங்களும், உத்தரவு பெற்ற விநியோகஸ்தர்களும் பெரிதும் கலவரமடைந்துள்ளனர்.

# இராணுவத்தினர் விவசாயமுகாம் அமைப்பர்

உடுவில், ஞாயிறு

உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் அகில இலங்கையிலும் சுமார் இருபது விவசாய முகாம்கள் நிறுவப்படவிருக்கின்றன. இலங்கை இராணுவப் பகுதியினர் இம்முகாம்களை நிறுவி உணவு உற்பத்தித் திட்டத்தை தீவிரப்படுத்துவர் எனத் தெரிய வருகிறது.

இராணுவத்தினரின் இந்த ஏற்பாட்டின்படி இவ்விவசாய முகாம்கள் பலாலி, திருக்கோணமலை, கந்தளாய், கட்டுநாயகா, தியத்தலாவை, பளுகொலை, மன்னார், கட்டுக்குருந்தை போன்ற இடங்களில் நிறுவப்படவிருக்கிறது.

இம்முகாம்கள் இருவருடகாலங்களுக்குள் நிறுவப்பட்டு அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கோரிக்கை

பரந்தன், ஞாயிறு

நீவில் பகுதியிலுள்ள முடிக்குரிய காணிகளில் மற்ற இடங்களிலுள்ள விவசாயிகளும் கமம் செய்ய உதவுமாறு நீவில் குஞ்சு பரந்தன் கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவரும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினருமான திரு. சி. சிவசம்பு கிளிநொச்சி எம். பி, பண்டிதர் கா. பொ. இரத்தினத்தை கோரியுள்ளார்.

உப உணவு செய்கையில்

## விவசாயிகள் ஊக்கம்

உடுவில், ஞாயிறு

உடுவில் பகுதியை அடுத்துள்ள வயல் வெளிகளில் உப உணவுப் பயிர்களைப் பயிரிடுவதில் இப்பகுதி விவசாயிகள் தீவிரகவனம் செலுத்தி வருகின்றனர். நெல் வேளாண்மை அறுவடைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. சென்ற இழமை இப்பகுதிகளில் பெய்த மழை காரணமாக விவசாயிகள் நிலத்தைப்பண்படுத்திக் கொண்டுள்ளனர்.

உடுவில், கந்தரோடை, சுன்னாகம், இணுவில், சங்குவேலி ஆகிய பகுதிகளில் உப உணவுப் பயிர்களான வெங்காயம், மிளகாய், எள்ளு, நிலக்கடலை, பயறு குரக்கன் ஆகியவற்றை விவசாயிகள் பயிரிடுவதில் முனைந்துள்ளார்கள்.

சென்ற வருடங்களில் வேளாண்மை அறுவடையின் பின் குறை நிலங்களாகக் காணப்பட்ட பல நிலங்களும் இன்று உப உணவு பயிர்ச்செய்கை நிலங்களாக மாறிக் காட்சியளிக்கின்றன.

## புதன்கிழமைகளில் ஓய்வு

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு பஜாரில் உள்ள ஓர் சலூன் வாசலில் ஓர் தபாற் பெட்டியை தபால் பகுதியினர் வைத்துள்ளனர். ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் சலூன் மூடப்பட்டிருக்கும் போது 'தபால்பெட்டிக்கும் ஓய்வு கிடைக்கிறது. அதாவது சலூன் உரிமையாளர் தபாற்பெட்டியை சலூனுக்குள் வைத்துப் பூட்டிவிடுவார். இதனால் ஒவ்வொ புதன்கிழமைகளிலும் பஜாரிலுள்ளவர்கள் தபால்களைப் போட தபாற்கந்தோருக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலைமாவட்ட கைப்பந்தாட்டச் சங்கத்தினர் விஜயசுந்தரம் கேடய கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை சென்ற மாதம் 19-ம் திகதி தொடக்கம் நடாத்திவருகின்றனர்கள். இச்சுற்றுப் போட்டியை குறிப்பிட்டபடி இம்மாதம் 28-ம் திகதிக்கிடையில் முடிப்பதற்கான சகல ஆயத்தங்களையும் சங்க செயலாளர் திரு. ந. சிங்காரவேலு செய்துள்ளார். இதுவரைநடந்து முடிந்த சில போட்டிகளின் விபரம் வருமாறு:

சைனிங்ஸ்டார் கோஷ்டியினர் ஆகாயவிமானப்படை கோஷ்டியினரை 2—1 ஆட்டங்களால் வெற்றியீட்டினார்கள். திரு. ஆர். ரி. விஜயசூரியா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இலங்கை ராணுவ பயனியர்ஸ் கோஷ்டியினர் இலங்கை கடற்படை கோஷ்டியினரை 2—0 ஆட்டங்களால் வெற்றியீட்டினார்கள். திரு. சிங்காரவேலு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சைனிங்ஸ்டார் கோஷ்டியினர் இலங்கை கடற்படை கோஷ்டியினரை 2—0 ஆட்டங்களால் வெற்றியீட்டினார்கள். திரு. இ. ஜே. ஏ. பி. தர்மதாஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

# உப சபாநாயகர் தெரிவு பற்றி பிரதமருக்கு பாராட்டு

உடுவில், ஞாயிறு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உப சபாநாயகராக உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருப்பது குறித்து கந்தரோடை சனசமூக நிலையம் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவை பாராட்டியுள்ளது.

"சட்டசபையில் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி சபாநாயகராகப் பதவி வகித்த பின்னர் இன்றுதான் மீண்டும் ஓர் தமிழர் உப சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த தெரிவு நாட்டின் ஒற்றுமை மனப்பான்மையை எடுத்துக் காட்டுவதோடு அரசாங்கத்தின் தேசிய மனப்பான்மையையும் பிரதிபலிப்பதாயுள்ளது. அரசாங்க கட்சியும் எதிர்க்கட்சியும் திறமைசாலி என கருதி, திரு. எம். சிவசிதம்பரத்தை இப்பதவிக்கு தெரிந்தெடுத்தது மகிழ்ச்சி தருகிறது. இதே போன்று நமக்கு நன்மை தரும் எல்லா விஷயங்களிலும் இருபகுதியினரும் தேசிய உணர்ச்சியை நிலைநிறுத்தி செயலாற்றவேண்டுமென வேண்டுகிறோம்."

இவ்வாறு சனசமூக நிலையத்தினர் தமது பாராட்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

புதிய உப சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரத்திற்கும் இவர்கள் பாராட்டுக் கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.

## நயினாதீவு கி. ச. தேர்தல்

நயினாதீவு, ஞாயிறு

நயினாதீவு கிராம சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணம் நயினாதீவு கிராம சபைக் காரியாலயத்தில் சென்ற 4-ம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டபோது 9 வட்டாரங்களுக்கு 23 பேர் கட்டுப்பணம் செலுத்தினர். இம்மாதம் 13-ம் திகதிவரையும் யாழ்ப்பாணம் தேர்தல் காரியாலயத்திலும் கட்டுப்பணம் செலுத்தலாம். தேர்தல் நியமனப்பத்திரங்கள் நயினாதீவு கிராம சபைக் காரியாலயத்தில் இம்மாதம் 14-ம் திகதி தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கிறது.

## பாராட்டு

உடுவில், ஞாயிறு

யாழ்ப்பாணம் உபசுகாதார அத்தியட்சகராக டாக்டர் கே. சற்குரு பதவி உயர்வு பெற்றுள்ளமை குறித்து தெல்லிப்பழை பகுதி சுகாதார ஊழியர்கள் அவருக்கு பாராட்டு தெரிவித்தார்கள்.

தெல்லிப்பழைப் பகுதியின் சுகாதார வைத்திய அதிகாரியாக நீண்டகாலம் சேவையாற்றிய டாக்டர் கே. சற்குரு அண்மையில் யாழ்ப்பாண உபசுகாதார அத்தியட்சகராக பதவி உயர்வுபெற்றார்.

# இளவரசருக்கு நிருபர் பதவி

## லண்டன் பத்திரிகை முன்வருகிறது

லண்டன், மார்ச் 10

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தின் மூத்த புதல்வனும் பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் அடுத்த வாரிசுமான சார்ல்ஸ் இளவரசரை தமது பத்திரிகைக்கு கனிஷ்ட நிருபராகப் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பமளிப்பதாக லண்டன் 'டெய்லிமிரர்' பத்திரிகை கூறியிருக்கிறது.

இளவரசர் சார்ல்ஸ் கல்வி பயிலும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக சஞ்சிகையில் அவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையை வாசித்த பின்னரே அவருக்கு கனிஷ்ட நிருபர் பதவியளிக்க முன்வந்திருப்பதாக 'டெய்லிமிரர்' பத்திரிகை கூறியுள்ளது.

# தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டாம்

## ரொடீஷியாவுக்கு பாப்பரசர் வேண்டுகோள்

வத்திக்கான், மார்ச் 10

ரொடீஷியாவில் நாளை திங்கட்கிழமை தூக்கிலிடப்படவிருக்கும் ஆறு ஆபிரிக்கர்களின் தூக்குத் தண்டனையை நிறுத்தி வைக்குமாறும் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குமாறும் சின்னப் பாப்பரசர் நேற்று ரொடீஷிய அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தார்.

முன்னர் மூன்று ஆபிரிக்கத்தலைவர்களைத் தூக்கிலிட்டதற்கு பாப்பரசர் கவலை தெரிவித்தார். இனியும் ஆபிரிக்கர்களைத் தூக்கிலிடுவதை நிறுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

## வேலை நிறுத்த பயமுறுத்தல்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு, காலித்துறை முகத்தைச் சேர்ந்த 32000 இலங்கை வர்த்தக ஊழியர் சங்க உறுப்பினர்கள் இம்மாதம் 18-ந் திகதி வேலை நிறுத்தத்திலிறங்க உத்தேசித்துள்ளனர். திருகோணமலையில் நடைபெறும் வர்த்தக ஊழியர் சங்க வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாகவே மேற்படி வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

## இலகுவாக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைப் பிரஜையாக அல்லது இந்தியப் பிரஜையாக மனுப்பண்ணுவதற்கு வேண்டிய விண்ணப்பப்பத்திரங்கள் மலையக மக்களுக்குச் சுலபமாகக் கிடைக்கக்கூடியதாகச் செய்வதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படவிருக்கின்றன.

தோட்ட சுப்ரின்டன்கள், மலையக வர்த்தக சங்கம், இலங்கை அரசாங்க ஏஜண்டுகள் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் இவர்களிடமிருந்து சுலபமாக இவ்விண்ணப்பப் பத்திரங்களைப் பெற ஏற்பாடு செய்யப்படும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்ய நியமிக்கப்பட்ட கூட்டுக் குழு சென்ற வாரத்தில் கூடிய போது இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோருவதெனத் தீர்மானித்திருந்தது.

## கல்லூரி கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் இராமகிருஷ்ண சங்க வைத்தீஸ்வர வித்தியாலய புதுக்கட்டடத் திறப்புவிழாவும், பெற்றார் தினவிழாவும் இம்மாதம் 13-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

கட்டடத்தில் ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தஜியின் திருவுருவப்படத்தை வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் திரைநீக்கம் செய்வார். ஸ்ரீமத் சுவாமி ஸ்ரீரங்கானந்தா, முதலியார் செ. முத்துத்தம்பி ஆகியோர் இங்கு சொற்பொழிவாற்றுவார்கள். மாணவர்களின் கதம்பநிகழ்ச்சிகள் இடம் பெறும். [வா. நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட்

# யாழ்ப்பாணக் கல்லூரியை சென். ஜோன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், திங்!

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி 77 ஓட்டங்களால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோற்கடித்தது.

இப் போட்டியில் முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 163 விக்கெட்டுகளைப் பெற்றது. இதில் குலநாதன் 17 ஓட்டங்களும், விபுலானந்தா 40 ஓட்டங்களும், சுரேந்திரா 39 ஓட்டங்களும், தெய்வேந்திரா ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்தெறி வீரரான ஜி. பெஞ்சமின் 32 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். யாழ்ப்பாணக் கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப்பெற்றது. இதில் சி. சண்முகம் 55 ஓட்டங்களும், ரஸ்க் 12 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் சென். ஜோன்ஸ் பந்தெறிவீரர்களான வாமதேவன் 34 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளையும், குலநாதன் 26 ஓட்டங்களையும் நஷ்டத்துக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

2-ம் இனிங்ஸ் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 102 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜே. நவரத்தினராஜா 19 ஓட்டங்களும் சுரேந்திரா 23 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்தெறி வீரரான ஜி. பெஞ்சமின் 45 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். யாழ்ப்பாணக் கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 79 ஓட்டங்களே பெற்றது. இதில் என் தயானந்தா 37 ஓட்டங்களைப் பெற்றார். இக்கட்டத்தில் சென் ஜோன்ஸ் பந்தெறி வீரர்களான வாமதேவன் 32 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளையும், குலநாதன் 22 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (வி. நி)

## ஐயனார்கோவில் மஹோற்சவம்

சுன்னாகம், ஞாயிறு

சுன்னாகம் அரிகரபுத்திர ஐயனார் கோவில் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் 1-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11-ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் பூர்த்தியாகும். 12-ம் திகதி அதிகாலை பொங்கல் நடைபெறும்.

உணவு உற்பத்தியில்

# யாழ். மாவட்டம் செய்யக்கூடிய சாதனை

## உதவி அரசாங்க அதிபர் விளக்கம்

உடுவில், ஞாயிறு

''காலபோகத்தில் மட்டும் உப உணவுப்பயிர்களை உற்பத்திசெய்யாமல் கோடையிலும் நீர்ப்பாசனம் மூலம் இவ்வுணவுப்பயிர்களை உற்பத்திசெய்ய முயலவேண்டும் இப்படிச் செய்வதன் மூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் அகில இலங்கைக்கும் போதுமான உப உணவுப் பொருட்களை யாழ்ப்பாண மாவட்டக் குடியேற்றவாசிகளே உற்பத்திசெய்யக் கூடியவர்களாக விளங்குவர்.''

யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை கரியாலை, நாகபடுவான், முளங்காவில் குடியேற்றத் திட்டவாசிகளின் கூட்டத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பலிதும் குறைந்த நெல் வேளாண்மையில் ஈடுபடுவதிலும் பார்க்க அந்நிலங்களில் உப உணவுப்பயிர்களை உற்பத்திசெய்யமுயலவேண்டும் புதிய அரசியல் பொருளாதாரச் சூழ்நிலைகளை அவதானித்து விவசாயிகள் புத்திசாலித்தனத்துடன், துரிதமாகப் பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடவேண்டுமென மேலும் பேசுகையில் உதவி அரசாங்க அதிபர் கூறினார்.

நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால்கள், போக்குவரத்து வசதிகள்செய்யும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தல், குடியேற்றத் திட்டத்தில் ஒவ்வொருவருக்கும் கிணறு வெட்ட 1,500 ரூபா இலவசமாக வழங்கல் போன்ற தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## சந்திரமதி இல்லத்துக்கு முதலிடம்

உடுப்பிட்டி, ஞாயிறு

புலோலி மேற்கு தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் தேசிய உடற்பயிற்சி தினத்தை முன்னிட்டுப் பாடசாலை இல்லங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு கவிஞர் திரு. வே. சிவசுகொழுந்து [யாழ்ப்பாணன்] தலைமைவகித்தார்.

சந்திரமதி இல்லம் 96 புள்ளிகளைப் பெற்று முதலாஸ்தானத்தையும், சாவித்திரி இல்லம் 84 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், கண்ணகி இல்லம் 72 புள்ளிகளையும், சகுந்தலை இல்லம் 72 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவிகளுக்குத் திருமதி வீ பாலசுப்பிரமணியம் பரிசில் வழங்கினார்

## 15மாணவர் சித்தி

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண ஆசிரிய சங்கத்தினரால் கடந்தவருடம் நடாத்தப்பெற்ற 5-ம் வகுப்புப் பரீட்சையில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்திமெமி. பாடசாலையிலிருந்து 15 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதில் 6 பிள்ளைகள் ''ஏ'' பிரிவிலும் மற்றும் 6பிள்ளைகள் 'பி' பிரிவிலும், 3 மாணவர் 'ஸி' பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

## கரணவாய் வென்றது

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய்தெற்கு இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கும் வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்திற்குமிடையே ஏற்பட்ட கிரிக்கெட் போட்டியில் கரணவாய் கோஷ்டியினர் 1 இன்னிங்ஸாலும், 18 ஓட்டங்களாலும் வல்வெட்டித்துறை கோஷ்டியைத் தோற்கடித்தனர்.

முதலாவது ஆட்டத்தில் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் 32 ஓட்டங்களை எடுத்ததால் அனைவரும் ஆட்டமிழந்தனர். கரணவாய்க் கோஷ்டி 80 ஓட்டங்களை எடுத்து 6 பேர் ஆட்டம் இழந்தனர். இரண்டாம் ஆட்டத்தில் வல்வெட்டித்துறைக்கோஷ்டி 30 ஓட்டங்களை எடுத்தது

கரணவாய் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கு திரு. க. சண்முகசுந்தரமும், வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகத்திற்கு திரு. எஸ். அன்ரனும் காப்டன்களாகக் கடமையாற்றினர்.

## பொன்னையா ஞாபகார்த்தவிழா

குரும்பசிட்டி, ஞாயிறு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் ஆதரவில் 'ஈழகேசரி, பொன்னையா ஞாபகார்த்த விழா இம்மாதம் 27. 28-ம் திகதிகளில் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

இரு தினங்களிலும் இரவு இவ்விழாவையொட்டி நாடகப் போட்டி நிகழ்வதுடன் முதல் தினம் காலையில் பேச்சுப் போட்டியும் இடம் பெறவுள்ளது. மூன்று பிரிவுகளாக நடக்கவுள்ள பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள நாட்டின் பல் வேறு பகுதிகளிலிருந்து கல்லூரிகளும பொது ஸ்தாபனங்களும் விண்ணப்பித்துள்ளன. நாடகப் போட்டி சரித்திர, சமூக என்ற அடிப்படையில் இரு பிரிவுகளாக நடைபெறும். போட்டிகளில் முதற் பரிசு பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படும். முதல் தினம் நண்பகல் மகேசுவர பூசையும் நடைபெறும்.

## ஒழுங்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

சக ஊழியர்களுடன் கைகலப்பில் இறங்கியதாகக் கூறப்படும் அரசாங்க ஊழியர் ஒருவர் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சுன்னாகம் பட்டின சபையில் நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தையொட்டி இங்கு கடமையாற்றும் பிரதம லிகிதர்மீதே பட்டின சபைத்தலைவர் ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இக்கைகலப்புச் சம்பந்தமாக ஏற்கனவே வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு அறிவிக்கபபட்டிருந்தது. இதுபற்றிய பூரணவிசாரணையொன்று விரைவில் நடைபெறவிருக்கின்றது.

(கா. நி.)

## பௌர்ணமி கலைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாநகர சபையின் பௌர்ணமி கலை நிகழ்ச்சியாக இம்மாதம் 14-ம் திகதி யாழ். திறந்த வெளியரங்கில் [illegible] யுஸ் நாடகம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய குடியேற்ற திட்டங்களில்

# சிறுபான்மை வகுப்பினருக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்'

உடுப்பிட்டி, ஞாயிறு

'இப்பகுதி மக்களிடையே தீவிர முன்னேற்றம் ஏற்படவேண்டியது அவசியம். கிராமமக்கள் தமக்கிடையே ஏற்படும் பிரச்னைகளை அமைதியான முறையில் தாங்களாகவே தீர்த்துக்கொள்வதற்கு இப்பகுதியில் சமாதான சபை நிறுவவேண்டியது இன்றியமையாதது தோன்றுகும் சிறுபான்மை வகுப்பினருக்கு விவசாயக் குடியேற்றத் திட்டங்களில் முதலிடம் கொடுக்கப்படவேண்டும். கல்வி, பொருளாதார நிலையில் சிறுபான்மைத் தமிழர்கள் கஷ்டப்பட்டே முன்னேறவேண்டும் 1957-ம் ஆண்டுதீண்டாமை ஒழிப்புச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டும் அச்சட்டம்இன்னும் சரிவர அமுலாக்கப்படவில்லை. தீண்டாமைப் பிரச்னை முற்றாகத் நீக்கப் பட்டபின்பே மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவேண்டும்.'

இவ்வாறு கரவெட்டி மேற்கு கனுவில் சனசமூக நிலைய ஜெயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் 5-ம் ஆண்டுப் பரிசளிப்புவிழாவுக்குத் தலைமைவகித்த அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் பிரசாரத் தலைவர் திரு. ஆ. குலேந்திரன் பேசுகையில் கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் பேசும்போது, 'இளம் சமூகத்தினருக்கு விளையாட்டுகள் மிக முக்கியமாகும் இச்சனசமூக நிலையத்தினர்இப்பகுதிக்குப் பல அரிய சேவைகளைச் செய்துவருகின்றனர். கனுவில் மக்கள் குடியிருக்கக் காணியின்றி அவதியுறுவதாக அறிகின்றேன் எனவே இவர்களுக்குக் குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்க நடவடிக்கை எடுப்பேன்' என்று கூறினார்.

கரவெட்டி மேற்கு கிராம சேவையாளர் திரு. கே. இரத்தினசிங்கம் பேசுகையில். இப்பகுதியில் சமாதான சபை அமைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தினார்.

விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு வடமராட்சிக்காரியாதிகாரி பரிசில்களை வழங்கினார்.

திருவாளர்கள் வ. தங்கமணி, ஏ. சகாதேவன், எஸ். இரத்தினம், கே. நாகமுத்து ஆகியோரும் பேசினர். நிலையக் காரியதரிசி திரு க. இராசரத்தினம் நன்றி கூறினார்.

மேற்படி சனசமூகநிலையம் யாழ். செஞ்சுடர் கலாமன்றம், ஜெகநாதன் நாடக மன்றம் ஆகியவற்றின் நாடகங்களும் இடம்பெற்றன.

புதிய

## உப சபாநாயகருக்கு பாராட்டு

குரும்பசிட்டி ஞாயிறு

ஜனப்பிரதிநிதிகள் சபையின் உப சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திற்கு காங்கேசன்துறை தொகுதி தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளைகள் மற்றும் பல பொது ஸ்தாபனங்களும் பாராட்டுச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளன. வெகுவிரைவில் இவருக்கு காங்கேசன்துறை தொகுதியில் பாராட்டுவிழா ஒன்றும் நடாத்தப்படவிருக்கின்றது.

## பெண்மையை மதிப்பதுசைவம்

புன்னாலைக் கட்டுவன், ஞாயிறு

''அன்னையையே முன்னறி தெய்வமாகக் கொள்வது சைவம். பெண்ணுக்குச் சமத்துவம் கொடுத்துத் தெய்வமாக மதிப்பது சைவம். இக்கருத்து அறுபத்து மூன்றுநாயன்மாரின் வரலாற்றில் ஆங்காங்குப் பிரதிபலிப்பதைக் காணலாம்'' என ஊரெழு விநாயகர் ஆலயத்தில் கதாகாலட்சேபம் நிகழ்த்திய செல்வி ஜெகதாம்பாள் சாம்பசிவக் குருக்கள் குறிப்பிட்டார்.

## வெளிநாடு பயணம்

அளவெட்டி ஞாயிறு

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பிரதம என்ஜினியராகக் கடமையாற்றிய திரு அந்தோனிபிள்ளை பிரான்ஸிஸ் வெளிநாடுகளிலுள்ள தொழிற்சாலைகளின் அபிவிருத்தி பற்றி அறியும் பொருட்டு யுனஸ்கோ உபகாரநிதியில் டென்மார்க் முதலிய நாடுகளுக்குப் பிரயாணத்தை ஆரம்பித்தார். டென்மார்க் நோர்வே, ஜெர்மன் மற்றும் சில நாடுகளில் இவர் ஆறுமாதகாலம் தங்குவார்.

## 'முஸ்லீம்கள் முன்னேறி உள்ளனர்'

மூதூர், ஞாயிறு

'இலங்கைமுஸ்லீம்கள் விழிப்படைந்து வருகிறார்கள். இன்று இலங்கையில் வாழும் எட்டுலட்சம் முஸ்லீம்களும், சகல துறைகளிலும் முன்னேறி தங்கள் அறிவு எழுச்சியைக் காட்டி வருகின்றார்கள். சமீபகாலமாக இலங்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்இதனை துலாம்பரமாகக் காட்டுகின்றன.''

இவ்வாறு மூதூரில் நடைபெற்ற இஸ்லாமிய முற்போக்கு இளைஞர் மன்ற கூட்டத்தில்மூதூர் 2வதுஎம். பி. மஜீத்பேசும் போது கூறினார்.

## கிண்ணியா துறைக்குப் பாலம்

மூதூர், ஞாயிறு

கிண்ணியா துறைக்கு நிரந்தரமான பாலம் ஒன்றை அமைக்கும் வேலைகளை விரைவில் ஆரம்பிக்குமாறு திருமலை அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். கிண்ணியாதுறைக்கு நிரந்தரமானபாலம் ஒன்றை அமைப்பதன் அவசியம்குறித்து மூதூர்த் தொகுதி முதலாவது எம். பி. ஜனாப் எம் எச். முகமது அலி இரண்டாவது ஜனாப் ஏ எல். ஏ. மஜீத் ஆகியோர் பலமுறை திருமலைமாவட்ட இணைப்பு குழுகூட்டங்களில் வற்புறுத்திவந்தனர்.

இஸ்ரேலுக்கு

## அமெரிக்கா எச்சரிச்சரிக்கை

வாஷிங்டன், மார்ச் 10

கடந்த இஸ்ரேல் - அரபு நாடுகள் போரில் இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப பிராந்தியங்கள் சம்பந்தமாக, இஸ்ரேல் சர்வதேசச் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'புத்தகப் பூச்சிகளாக மட்டும் மாணவர்கள் இருக்கப்படாது'

அளவெட்டி, ஞாயிறு

மாணவர்களின் ஆற்றல் அளப்பரியது. அவர்கள் ஒன்றாக இணைந்து செயற்பட முற்பட்டால் நாட்டிற்கும் நமக்கும் நன்மை தரக்கூடிய எத்தனையோ அரும் பெரும் சாதனைகளை நிலைநாட்ட முடியும். இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களாகிய நீங்கள் இம் மன்றத்துக்கும் முக்கிய ஆர்வம் கொடுத்து ஒன்றுபட்டு உழைத்தால் எமக்கும் எமது கல்லூரிக்கும் பெருமையுண்டாகும். மாணவர்கள் புத்தகப்பூச்சிகளாகமட்டும் இருந்தால் போதாது. உலக அனுபவத்துடன் நிர்வாகத்திறனும் பெற்று சான்றோர்களாக திகழவேண்டும். அதற்காக இம்மன்றம் பெரிதும் உழைக்கவேண்டும்'.

இவ்வாறு நடேஸ்வராக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தை தொடக்கி வைத்துப் பேசுகையில் நடேஸ்வராக் கல்லூரியின் விஞ்ஞானத்துறைத் தலைவரும் மன்றத்தின் உப காப்பாளருமான ஐ. வைத்தியநாதர் கூறினார்.

இதையடுத்து மேற்படி மன்றத்தின் புதுவருட அங்கத்தவர் தெரிவில் தலைவராக செல்வன் சி. சற்குணசிலன், உபதலைவராக செல்வி து. வசந்த மல்லிகா, இணைச் செயலாளர்களாக செல்வன் சி. இலிங்கவேலாயுதம், செல்வன் த. இலட்சுமிகாந்தன், பொருளாளர்களாக செல்வன் இ. கருணநிதி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# 'தேசிய அரசாங்கம் இளைஞரை ஏமாற்றிவிட்டது'

## சிறிமா கூறுகிறார்

அனுராதபுரம், ஞாயிறு

'தேசிய அரசாங்கம் தான் தேர்தல் காலத்தின் போது அளித்த ஒரு வாக்குறுதியையாவது நிறைவேற்ற தவறிவிட்டது. குறிப்பாக இளைஞர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். மூன்று வருட தவறான ஆட்சியின் பின் இப்போது தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் தமது தவறை உணர்ந்துள்ளார்கள்'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா அநுராதபுரத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

திருமதி சிறிமா மேலும் பேசுகையில் கூறியதாவது:

கூட்டரசாங்கம் அமுல் நடத்தி வந்த முற்போக்குத் திட்டமெல்லாம் இப்போது தேசிய அரசாங்கத்தால் அகற்றப்பட்டு விட்டது.

குழந்தைகள் பால் உணவு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு இப்போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குழந்தைகள் பட்டினியால் வாட பெற்றோர் மனக்கஷ்டமடையவேண்டிய சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

அரிசி வெட்டு மக்கள் மீது விழுந்துள்ள பலத்த அடி வெளியே கூறவேண்டும். இப்போதுள்ள நிலை சீராக்கப்படாவிட்டால் இன்னும் இருவருடங்களில் இங்கு பஞ்சமேற்படும்.

மிகமதிப்பு வாய்ந்த அன்னிய செலவாணி கார்களும், ட்ருக்டர்களும் ஜீப்களும் வாங்குவதற்காக வீணாக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் முதலாளிவர்க்கத்தினருக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. இவர்கள் பெறுமதிவாய்ந்த மரங்களை எடுத்துச் செல்கின்றனர்.

தமது அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோது இ. போ. ச. லாபத்தில் நடைபெற்றதாகவும் இப்போது நஷ்டத்தில் நடைபெற்றுவருவதாகவும் திருமதி சிறிமா கூறினார்.

### மாற்றம் பின்போடப்பட்டது

கொம்பனித்தெரு, ஞாயிறு

சிங்களத்தில் தேர்ச்சியடைந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இம்மாதம் மாற்றப்படவிருந்தது பின்போடப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

சிங்களத்தில் தொடர்பு கொள்பவர்களுடன் சிங்களத்திலும் தமிழில் தொடர்பு கொள்பவர்களுடன் தமிழிலும் தொடர்பு கொள்ளுவதற்காகவே இவர்கள் ஆங்காங்கே மாற்றப்படவிருந்தனராம். இவர்களது மாற்றம் ஏப்ரில் மாதம் 1-ம் திகதியிலிருந்து அமுலுக்கு வரலாம் என நம்பப்படுகிறது.

### பாலைதீவில் திருவிழா

அனலைதீவு, ஞாயிறு

பாலைதீவிலுள்ள தேவாலயத்தில் திருவிழா தொடங்கிவிட்டது. இத்திருவிழாக்களில் கடமையாற்றுவதற்காக ஊர்காவற்றுறை அப்போதிக்கரியும்அல்லைப்பிட்டி சுகாதாரப் பரிசோதகர் திரு விஸ்வலிங்கமும் சென்றுள்ளனர். 6 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவுக்கு ஆயிரக்கணக்கானோர் செல்கின்றனர்.

### றேசிலில் பலருக்கு காயம்

சென்னை மார்ச். 10

சென்னை குதிரைப்பந்தய திடலில் இன்று கூடிய பல்லாயிரக்கணக்கான ஜனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் வரவழைக்கப்பட்டனர்.

இன்று நடைபெற்ற பந்தயத்தில ரூ. 5 லட்சம பெறுமதியான பரிசு தங்களுக்குக் கிடைக்காதா என்ற ஆவலில் இந்த ஜனக் கூட்டம் கூடியிருந்தது. அப்பொழுது ஏற்பட்ட றெரிசிலில் பலர் காயமுற்றனர்.

### பாப்பரசர் வேண்டுகோள் ஸ்மித் ஆலோசனை

லண்டன், மார்ச். 10

ரொடீசியாவில் தூக்கிலிடப்படவிருக்கும் 6 ஆபிரிக்கர்களையும் விடுவிக்கும்படி பாப்பாண்டவர் விடுத்த வேண்டுகோள்பற்றி திரு. ஜயன் ஸ்மித்தும் அவருடைய மந்திரிகளும் இன்று ஆலோசனைகள் நடத்தினார்கள்.

### 'நாட்டு முன்னேற்றத்துக்கு வேலைத்திட்டம் தேவை'

திருக்கோணமலை, ஞாயிறு

''உணவு உற்பத்தி இயக்கத்தைப் பொறுத்தமட்டில் எங்களின் பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குக் கிராம ரீதியில் தான் முடியும். எங்களிடம் உள்ள வசதிகள் யாவற்றையும் உண்மையாகப் பயனளிக்கக்கூடிய முயற்சிகளிலே தான் செலவிட வேண்டும். நாங்கள் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும், அல்லதுமடிந்துவிடவேண்டும். ஆகலினால் பற்றாக்குறை நிலையை இன்னும் நீடிக்க விடாது நமது தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்வதற்குச் சகல இயக்கங்களையும் கிராமத் தலைவர்களையும் முன்வருமாறு வேண்டிக்கொள்கிறேன்''.

இவ்வாறு திருக்கோணமலை மாவட்டத்தின் ஸ்தலஸ்தாபன உதவி ஆணையாளர் திரு. டி. வாமதேவன் சாம்பல்தீவு என்னும் கிராமத்தில் நடந்த கிராமிய ரீதியிலான தலைவர்களின் கருத்தரங்கு மகாநாட்டை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் கூறினார். இம்மகாநாட்டுக்கு சாம்பல்தீவு கிராமசபையின் தலைவர் திரு. எம். தங்கராஜா தலைமை வகித்தார்.

திரு. வாமதேவன் தொடர்ந்து பேசுகையில், 'நம் நாட்டு முன்னேற்றத்திற்கு நாம் எப்போதும் பிறநாட்டின் உதவிகளை எதிர்பார்த்து நிற்கக்கூடாது. ஆகையினால் சிரமதான ரீதியில் நடாத்திவைக்கக்கூடிய வகையில் ஒவ்வொரு கிராமத் தலைவர்களும் நாட்டின் முன்னேற்றத்துக்கான பலவித வேலைத்திட்டங்களை நிர்ணயிக்கவேண்டும். மக்கள் யாவரும் ஒன்றுதிரண்டால் நமக்கு நாமே உதவி என்னும் தன்னம்பிக்கையின் அடிப்படையிலான ரீதியில் நாடும்முன்னேற்றம்காணும் இன்று நம்நாட்டில் சிரமதான இயக்கம் போற்றத்தக்க முறையில் இயங்கிவருகின்றது: இதில் புகழ்ச்சிஎதுவும் கிடையாது ஏனெனில் இது எங்களின் தொன்றுதொட்டு வந்தபண்பாடாகும்.''] எனக் குறிப்பிட்டார் மற்றும்திரு. முத்துவேற்பிள்ளை சற்குணராசா [திருமலைமாவட்ட தேசியசேமிப்பு இயக்க மேற்பார்வையாளர்] திருமலை மாவட்டக் காரியதிகாரி திரு. கே. மகாதேவா திரு. எஸ். சிவதாசன் [கம்பலகாமம்] வண. பிதா-பிரேடி ஆகியோரும் [illegible] கருத்தரங்கு மகாநாட்டில் கலந்து உரையாற்றினர்.

### சுகாதாரவாரக் கொண்டாட்டம்

புத்தளம், ஞாயிறு

சுகாதாரவாரக் கொண்டாட்டம் ஸகிராமகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடந்தபோதுமாணவரின் உடற்பயிற்சிஅப்பியாசங்களை பார்த்து உதவி அரசாங்க அதிபர் கவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாமெனக் கூறினார்.

பிரதான அதிதிகளாக உப அதிபர் திரு. ஜோன். சி. பெரேரா, வட்டார அதிகாரி திரு. கே. கோபாலரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை 9-00மணிக்கு திரு. பெரேரா தேசியக்கொடி ஏற்றினார். திரு. கோபாலரத்தினம் சாரணக் கொடியையும் ஜனாப் எம். ஏ. சி. தாகா பாடசாலை அதிபர் பாடசாலைக் கொடியையும் ஏற்றிவைத்தனர். பின்னர் அணிவகுப்பும் அதைத் தொடர்ந்து உடற்பயிற்சி விளையாட்டுக்களும் இடம்பெற்றன. தொடர்ந்து பிற்பகல் 4-30 மணியளவில் புத்தளம் சன்ரஸ்கழகத்திற்கும் ஸகிரா மாணவர் கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டி நடை பெற்றது ஸகிரா 7:1 கோல்கள் பெற்று வெற்றிமீட்டியது.

# வியட்னாமுக்கு மேலும் 2 லட்சம் அமெரிக்க துருப்பு

நியூயோர்க், மார்ச் 10

வியட்னாமுக்கு மேலும் 2 லட்சம் அமெரிக்கத்துருப்புகள் தேவையெனத் தென் வியட்னாமிலுள்ள அமெரிக்கத் தளபதி வெஸ்மோலண்ட் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆராய்ந்தது முடிவுசெய்ய போதிய அவகாசம் தேவையென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு கிளிபோர்ட் தெரிவித்துள்ளார்.

# இங்கு தொழிற்சாலை நிறுவ இந்திய நிறுவனம் விருப்பம

புதுடில்லி, மார்ச் 10

இந்துஸ்தான் யந்திரக் கருவிகள் ஸ்தாபனம், இலங்கை விரும்பினால் இலங்கையிலும் யந்திரக்கருவிகள் தயாரிப்பு நிலையம் ஒன்றினை ஆரம்பிக்க ஆர்வம் தெரிவித்திருக்கின்றது.

இந்த ஸ்தாபனம் தற்பொழுது அச்சு யந்திரக் கருவிகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றது. உலகின் பல நாடுகளிலிருந்தும் யந்திரக்கருவிகளுக்கு ஆடர்கள் கிடைத்திருக்கின்றனவாம்.

ஆங்கிலத்தில் விஞ்ஞானம் கற்போர்

# தமிழ்மொழியையும் மறந்து விடலாகாது

## மாணவர்களுக்கு நீதியரசர் அறிவுரை

கோப்பாய், ஞாயிறு

'தமிழ் மாணவர்கள் யாவரும் தற்போது தமிழ்மொழி மூலம் கற்றுவரும் விஞ்ஞானக்கல்வியால் முன்னேற்றமடையமுடியாது உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தின் மூலமாகவே விஞ்ஞானக்கல்வி பாடசாலைகளில் போதிக்கப்படவேண்டியது அவசியம்.''

இவ்வாறு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றிய நீதியரசர், எச். டபிள்யூ தம்பையா கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. இ. கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. தம்பையா தொடர்ந்து பேசுகையில் 'ஆங்கிலத்தின்மூலம் விஞ்ஞானம் கற்கும்தமிழ் மாணவர்கள் தங்கள் அன்னை மொழியாம் தமிழ் மொழியையும் மறந்துவிடலாகாது நானிலம் புகழ்நனி சிறந்த மொழியாம் தமிழ் தொன்மையும் மகிமையும் பெற்று கடந்த 4000 ஆண்டுகளாக நடந்துவரும் மங்கையாக விளங்குகின்றாள். அதன்பண்புகளை அறிந்து தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து தாய்மொழியை வளர்க்க ஆசிரியர்கள் மாணவர்கள் யாவரும் ஒரே நோக்கத்துடன் அன்புடனும் ஒற்றுமையுடனும் சேவையாற்றிடவேண்டும். அது மாத்திரமன்றி தமிழ் மாணவர்கள் தங்கள் தாய்மொழியை உத்தியோகத்துக்காகவும் பட்டத்திற்காகவும் பயிலாது அதன் மூலம் வாழ்க்கை முறையை நல்வழியில் அமைத்தலவசியம். என்றார்.

கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. திருமதி தம்பையா பரிசில்களை வழங்கினார்.

# 'அனலைதீவிலும் தையல் பாடசாலையை நிறுவுங்கள்'

## வாலிபர் இயக்கம் கோரிக்கை

அனலைதீவு, ஞாயிறு

அரசாங்கத்தினரால் இலங்கையில் பல்வேறு இடங்களிலும் நியமித்தது தையல் போதனாசிரியர் ஒருவரை அனலைதீவிலும் நியமிக்குமாறு அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர். இங்குள்ள பல மாணவிகள் தையல் கற்பதற்கு வெளியிடம் செல்லவேண்டியுள்ளதாகவும் அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

அனலைதீவுப் பெண்கள் அதிகமானோர் நெசவுத் தொழிலில் ஈடுபடவிரும்பிய போதிலும் நெசவுசாலை இல்லாததால் வெளியிடங்களுக்குச் சென்று நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் எனவும் உடனடியாக நெசவு நிலையம் அமைத்துத்தருமாறும் அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தினர் சமூகசேவைப் பகுதியினருடன் தொடர்பு கொண்டுள்ளனர் எனவும் தெரிகிறது. அனலைதீவிலிருந்த நெசவுசாலை சூறாவளி ஒன்றால் பாதிக்கப்பட்டு 3 வருடங்களுக்கு மேலாகியும் இங்கு நெசவு சாலை நிறுவப்படவில்லையாம்.

இதுபற்றிப் பல தடவைகள் அனலைதீவு கிராம முன்னேற்றச் சங்கம் சமூக சேவைப் பகுதியினருடனும், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளையுடனும் தொடர்புகொண்டிருந்த போதிலும் எதுவித பயனும் கிடைக்கவில்லையாம்.

அனலைதீவில் ஒரு நெசவு நிலையத்தையும், தையற் பாடசாலையையும் நிறுவித்தருமாறு சமூகசேவைப் பகுதியினரைக் கோரும் வாலிபர் இயக்கம், அனலைதீவு கிராம சபையினரையும் இது விடையமாக முயற்சி எடுத்து அக்கறை காட்டுமாறு கோருகின்றது.

### தவறிவிட்டது

யோன்சன் இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் பெறும் அட்டை 9-3-68-ல் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சி. செல்லத்துரை, பெரிய கடற்கரை, தொண்டைமானாறு. 1788

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச்மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org